Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 08 ஹிஜ்ரி 1427 ஸபர் 21 (22.03.2006) புதன்கிழமை இதழ் 172

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20% விசேட சலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

# போராளிகளின் யாழ். வருகை

# அரசின் நிபந்தனையால் ரத்து

யாழ்ப்பாணம்

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள குடாநாட்டில் அரசியல் பணியில் ஈடுபடுவதற்காக இன்று யாழ்.வரவிருந்த போராளிகளின் பயணம் - அரசாங்கம் விதித்த புதிய நிபந்தனைகளால் கடைசி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்தமாதம் ஜெனிவாவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது இணக்கம் காணப்பட்டதற்கமைய - அரசியல் போராளிகள் தமது பணிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைவாக யாழ்ப்பாணத்துக்கு அரசியல்துறைப் போராளிகள் 35 பேர் அடங்கிய குழு ஒன்று அரசியல் பணிக்காக இன்று வருவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொற்பதி வீதியில் படையினர் குவிப்பு

யாழ்ப்பாணம்

கொக்குவில் - பொற்பதி வீதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தைச் சுற்றி நேற்று அதிகளவில் படையினர் குவிக்கப்பட்டு வீதியால் சென்ற மக்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். இதனால் நேற்று இந்த வீதியில் பெரும் பதற்றநிலை உருவாகியது.

குடாநாட்டில் படையினர் மற்றும் ஒட்டுப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களையடுத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு

மட்டக்களப்பு-ஏறாவூர் ஐயங்கேணியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான ராஜு என்று அழைக்கப்படும் சித்திரவேல் செல்வம் (வயது 36) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது. ரி.56 ரக துப்பாக்கியால் இவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா இணக்கப்பாடு: அமுல்படுத்த வேண்டும்!

### இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் ஏற்பட்ட உடன்பாட்டை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவது அவசியம் என இலங்கை அரசிடம் ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டா பெர்க்ரிரோ வால்ட்னெரை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று பிரஷெல்சில் சந்தித்துப் பேசினார்

இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சியை இலங்கை அரசு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும், உண்மையான சமாதான முயற்சிக்கு

## நோர்வேயை வெளியேற்றக் கோரி பிக்குகள் முன்னணி ஆர்ப்பாட்டம்



கொழும்பு

சமாதான முயற்சியிலிருந்து நோர்வே அரசை உடன் வெளியேற்றக்கோரி நோர்வே தூதரகம் முன்பாக பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கான பிக்குகள் கலந்துகொண்டு நோர்வே அரசுக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பு - விகாரமாதேவி பூங்காவில் ஒன்றுகூடிய தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமிலதேரர் தலைமையிலான பிக்குகள் நோர்வே அரசுக்கெதிராகக் கோஷமிட்டவாறு நோர்வே தூதரகத்தைச் சென்றடைந்தனர்.


கொழும்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் ஏற்பட்ட உடன்பாட்டை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவது அவசியம் என இலங்கை அரசிடம் ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டா பெர்க்ரிரோ வால்ட்னெரை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று பிரஷெல்சில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சியை இலங்கை அரசு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும், உண்மையான சமாதான முயற்சிக்கு ஜெனிவாவில் ஏற்பட்டுள்ள வாய்ப்புகளை தவறவிடக்கூடாது என்றும் வால்ட்னெர் வலியுறுத்தினார்.

அத்துடன் - ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா பேச்சுக்களுக்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்க - ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துதல் அவசியம் என்றும் அவர் மங்களவிடம் வலியுறுத்தினார்.



ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கான பிக்குகள் கலந்துகொண்டு நோர்வே அரசுக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பு - விகாரமாதேவி பூங்காவில் ஒன்றுகூடிய தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமிலதேரர் தலைமையிலான பிக்குகள் நோர்வே அரசுக்கெதிராகக் கோஷமிட்டவாறு நோர்வே தூதரகத்தைச் சென்றடைந்தனர்.

ஜெனிவா பேச்சுக்களுக்குச் சென்ற விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவினருக்கு செங்கம்பள வரவேற்பு மூலம் அவர்களுக்கு அரச கௌரவம் வழங்கப்பட்டதை ஆட்சேபித்தும் - நோர்வே தூதுவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் ஜிகாத் இயங்குவதை ஊர்காவலர் உறுதிப்படுத்தினர்

திருகோணமலை —

கிழக்கில் முஸ்லிம் ஆயுதக குழுவான - ஜிகாத் குழு இயங்குவது குறித்த தகவல்கள் உண்மையே என்றும், இது தொடர்பான விபரங்களையும் புலிகளிடம் பிடிபட்ட ஊர்காவற்படையினர் இருவர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே - இரண்டு முஸ்லிம் ஊர்காவற் படையினரும் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டனர்.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் கடந்த 14 ஆம் திகதி உள் நுழைந்த ஊர்காவல் படையினர் இருவர் புலிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு முஸ்லிம் ஊர்காவல் படையினரை விடுதலைப் புலிகள் நேற்று ஊடகவியலாளர்கள் முன்பாக முன்னிலைப் படுத்தினர்.

ஊர்காவல் படையினர் முன்னிலைப்படுத்தப்பட்டது தொடர்பாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை வெளியிட்ட அறிக்கையில் -

கடந்த 14 ஆம் திகதி எமது கட்டுப் பாட்டுப் பகுதியில் உள்நுழைந்த ஊர்காவல்படை யினரான வாழைச்சேனையைச் சேர்ந்த சித்திக்ரிசீன் (வயது 23). மற்றும் தோப்பூரைச் சேர்ந்த அனிபா அன்சார் (வயது 30) ஆகிய இருவரும் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரி (12 ஆம் பக்கம் பார்க்க)

# அனுசரணை பணிக்கு எதிர்ப்பு நோர்வே அரசாங்கம் கவலை!

கொழும்பு —

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே அரசாங்கம் வெளியேற வேண்டும் என இலங்கையின் சில கட்சிகள் தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பாக நோர்வே தமது கவலையை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான நோர்வே தூதுவராலய பேச்சாளர் ரொம் நப்ஸ்கொக் இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் -

நோர்வே அனுசரணையாளர்கள் செயற்படும் நாடுகளின் போராளிக் குழுககளின் பிரதிநிதிகள் ஒஸ்லோ வரும்போது வழங்கப்படும் வழமையான வரவேற்பையே - தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டது.

மத்திய கிழக்கு, சூடான், ஹெய்ட்டி உள்ளிட்ட நாடுகளின் போராளிக் குழுக்களின் தலைவர்கள் ஒஸ்லோ வரும்பொழுதும் இப்படியான வரவேற்பை நோர்வே அரசு வழங்குவது வழக்கம்.

இதுதவிர, அனுசரணைப் பணிகளை மேற்கொண்டு வரும் நாங்கள் அமைதியான தீர்வை எட்டுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட போராளிக் குழுக்களுடன் நேரடியான பேச்சு வார்த்தைகளை நடத்துவது சமாதான நடவடிக்கைகளை இலக்குவாக்குவதற்கே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இரண்டாவது நாளாகவும் தாக்குதல்!

திருகோணமலை —

திருகோணமலை கடற்பரப்பில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி நேற்று இரண்டாவது நாளாகவும் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் போராளி ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் திருகோணமலை கடற்பரப்பில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான சம்பூர், சூடைக்குடா, கூனித்தீவு, கடற்கரைச்சேனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை நோக்கி துப்பாக்கி மற்றும் பிரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்ச்சியாக ஒன்றரை மணிநேரம் நடைபெற்றதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வணிகமாணிப் பரீட்சையில் 34 பேர் சித்தியடைந்தனர்

சுதுமலை—

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு அலகில் பகுதி II வணிக மாணி பரீட்சையில் 34 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்களின் விபரங்கள் வருமாறு -

ஜி.செந்தமிழ்ச்செல்வன், கே. ஆனந்தவேல், எஸ்.அஞ்சலோ, ரி.அபிராமி, ஜி.ஞானசம்பந்தன், எஸ்.கிருபாலினி, ப.ஜெகதீஷன், எஸ்.சயந்தி, எஸ்.சத்தியசீலன், ஆர்.சிவகுமார், கே. சுகந்தன், கே.தனேஸ்வரன், டி.விக்டர்யோசேப், என்.வித்தியா, ஏ. டானியல் சுரேந்திரன், ஆர்.ரஜீவன், எஸ்.துளசிதாசன், வி.விஜிதா, வி.அருந்தவக்குமார், ஆர்.சிறிரஞ்சினி, எம். ஜோன்கெனடி, பு.மேரிதிபிக்கா, ஆர். நர்மதா, ரி.மேரிஅன்ரநீற், எஸ்.சிவசிறி, எஸ்.பத்மினி, பி.விஸ்ணுசிறி, எஸ்.அஜந்திகா, கே.தயாளினி, எம். நிவிந்தன், எஸ்.திருச்செல்வி, எஸ்.சிறிரங்கன், கே.அருந்தவமலர், என். ஆனந்தவள்ளி ஆகியோரே சித்தியடைந்துள்ளனர். (44)

# வெடிபொருள் வெடித்ததில் சகோதரர்கள் இருவர் காயம்

யாழ்ப்பாணம்—

ஊரெழுப் பகுதியில் கல் அகழ்வதற்காக பயன்படுத்திய வெடி எதிர்பாராத விதமாக வெடித்ததில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஊரெழு மேற்கைச் சேர்ந்த சகோதரர்களான ஆறுமும் தேவபாலன் (வயது 48), ஆறுமுகம் வசிகரன் (வயது 42) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கல் அகழ்வதற்காக வைக்கப்பட்ட வெடி வெடிக்காததால் மீளச் சரிபார்க்க எடுத்த போதே திடீரென வெடித்ததில் இருவருக்கும் தலை, கை, கழுத்து போன்ற பகுதிகளில் காயம் ஏற்பட்டது. (வ)

# சங்கம நிகழ்வு

யாழ்ப்பாணம்—

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்குழுவானது 'நாம் தொடங்குவோம்' என்ற தொனிப்பொருளில் கிராமிய மகளிர் குழுக்கள் சங்கமிக்கும் பல் நிகழ்வுத்திட்ட நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் யாழ்ப்பாணம் ஒ.எல். ஆர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சங்கம நிகழ்வில் கண்காட்சிகள், நாடகங்கள், கலந்துரையாடல்கள் என்பன இடம்பெறவுள்ளதாக பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்குழு அறிவித்துள்ளது. (31, ரி)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்

தங்கர் பச்சான், நவ்யா நாயர் நடித்த

சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி

தினசரி நான்கு காட்சிகள்

கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின் நடித்த



மெர்குரிப்பூக்கள்

பு. நேரம் : 10.30,2.00, 6.00,9.00




காட்சி:10.30, 1.30, 4.30, 7.30 (பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.00

நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

கோவை பிறதேர்ஸ்

கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00


## சிறு விளம்பரம்


### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பலாலி றோட்டுக்கு அருகில் புதிய வீடு உடன் விற்பனைக்கு. விலை பேசித் தீர்மானிக்கலாம். நேரில் வரவும். தொடர்பு :- 0773114791. (2222)


# 2006 சிறுபோக பயிர்ச்செய்கை

# இரணைமடுக்குளம்

1951 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச்சட்டத்தாலும், 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டிற்கான சிறுபோக பயிர்ச்செய்கைக்காக இரணைமடுக்குள கூட்டத்தினை கூடி முடிவு செய்ய முடியாதநிலை உள்ளதால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகிய நிருஞாவுக்கரசு இராசநாயகமாகிய நான் எனக்கு அளிக்கப்பட்ட விசேட அதிகாரத்தின் மூலம் மார்ச் 21 ஆம் திகதி அன்று இரணைமடுக்குளத்திற்கான பின்வரும் பயிர்ச்செய்கை அட்டவணையை இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | விதைக்கும் ெநல்லினம் | :- | BG - 406, BW - 351, BG - 358, BG - 300 | |
| | | | வலது கரை | இடதுகரை |
| 02. | விதைக்கப்படும் விஸ்தீரணம் | :- | 2500 ஏக்கர் | 5000 ஏக்கர் |
| 03. | முதல் நீர் விநியோகம் | :- | 22.03.2006 | 01.04.2006 |
| 04. | இறுதி விதைப்புத் திகதி | :- | 15.04.2006 | 30.04.2006 |
| 05. | இறுதி நீர்விநியோகம் | :- | 10.08.2006 | 15.08.2006 |
| 06. | கால்நடை கட்டுப்பாடு | :- | 01.04.2006 தொடக்கம் | 31.08.2006 வரை |

கமநலச் சேவை பெரும்பாக உத்தியோகத்தரால் நியமிக்கப்படும் கால்நடை பிடிப்பவர்களால் பிடிக்கப்படும் கால்நடைளுக்கு வழமைபோல் பயிர்அழிவு நட்டம் அறவிடப்படும். பயிர்அழிவு நட்டம் கட்டத்தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் அந்தக் கால்நடைகள் விற்கப்படும்.

**குறிப்பு:-** விதைக்கப்படும் வாய்க்கால்களை 10.03.2006 ஆம் திகதி நடைபெற்ற சிறுபோக ஆலோசனைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் விநியோக வாய்க்கால்களின் விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் நீர்ப்பாசன பொறியியலாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.4452)


# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 12.04.1953

விண்ணில் 10.02.2006

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குடும்பத் தலைவரின் இழப்பை அறிந்து எங்களோடு தங்கள் துயரை நேரடியாகக் கலந்துகொண்டும், தொலைபேசி, தொலைநகல் தந்தி, பத்திரிகை, அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலமாகவும் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த, புரிகின்ற அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் இன்று புதன்கிழமை (22.03.2006) பகல் 11.30 மணிக்கு மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடபெறவிருக்கும் நினைவஞ்சலி திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து சகோதரன் வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள், உற்றார், உறவினர்கள்.

அமரர்
லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

உரிமையாளர் : NEWTON WINE SHOP, A.J.M TEX, ALAI ARASY } JAFFNA

யாவில் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை

தொலைபேசி :
021 - 222 5352, 021 - 222 7665
077 - 253216, 0777 - 747986

[C/5156]

# இராணுவத்தின் ஆயுதங்களைக் களைந்தபின் எமது ஆயுதக் களைவு குறித்து பேசட்டும்!

## தமிழ்ச்செல்வன் ஆவேசம்



கிளிநொச்சி—

தமிழர் தாயகத்தில் பேரழிவையும், நாசத்தையும் விளைவித்திருக்கும் அரச படைகளின் ஆயுதங்களைக் களைந்துவிட்டு எமது ஆயுதக் களைவு பற்றி அரசாங்கம் பேசட்டும் என்று - விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆவேசமாகப் பதிலளித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனிய அண்மையில் புலிகளின் ஆயுதக்களைவு மேற்கொள்ளப்பட்டால் துணை இராணுவக் குழுவினரது ஆயுதக்களைவு பற்றி பேசலாம் என்று கூறியிருந்தார்.

இதற்குப்பதிலளிக்கும் வகையில் சு.ப தமிழ்ச்செல்வன் கொழும்பு ஆங்கில வார இதழான சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில்:-

*கேள்வி:-* ஜெனிவா பேச்சுக்கள் தொடர்பாக பல முரண்பாடுகள் வெளிவருகின்றன. இந்த நிலையில் ஏப்ரல் பேச்சுக்கள் தொடர்பாக?

*பதில்:-* ஜெனிவா பேச்சுவார்த்தை முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் ஒப்பந்தத்தில் எதுவித திருத்தமும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படவில்லை. அது ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டு இருக்கிறது. இரு தரப்பினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்பதாக ஒப்புக்கொண்டனர். மேலும், போர்நிறுத்த ஒப்பந்த சரத்தான 1.8 இன் கீழ் வடக்கு-கிழக்கில் துணை இராணுவக்குழுக்களின் ஆயுதக்களைவு பற்றியும் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் 4 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொண்டாயிற்று. கடந்த 4 ஆண்டுகாலமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

ஜெனிவாவில் துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களைக் களைய ஒப்புக்கொண்டுவிட்டு நாடு திரும்பிய பின்னர் அதை மறுப்பது என்பது கேலிக்குரியதானது. இத்தகைய அறிக்கைகள் மூலம் அரசாங்கம் தமிழ் மக்களையோ தமிழீழ விடுதலைப்புலிகளையோ மட்டும் ஏமாற்றவில்லை-ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுகின்றனர்.

அரசாங்கத்தின் இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகள் தொடர்பாக விடுதலைப்புலிகளும், தமிழ் மக்களும் வருத்தமடைகின்றனர்.

மக்களை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையும் தற்போது அரசாங்கம் ஏமாற்றுகின்றது.

கேள்வி:- ஏப்ரல் பேச்சுக்களில் எந்த விடயங்களை விடுதலைப் புலிகள் முன்வைப்பார்கள்?.

பதில்:- போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பல்வேறு சரத்துக்கள் செயற்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் உள்ள தமிழர்களின் இயல்பு வாழ்க்கை மீளத்திரும்புதல் தொடர்பாக பல சரத்துக்கள் நிறைவேற்றப் படவேண்டும்.

அரசியல் பேச்சுக்களுக்கு முன்பாக தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கை மீளத்திரும்புவதன் மூலம் நம்பிக்கை கட்டியெழுப்பப்படவேண்டும்.

ஜெனிவா பேச்சுக்களில் போர்நிறுத்த ஒப்பந்த நடைமுறைப்படுத்தல் பிரதானமாக இருக்கும் என்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், எமது தேசியத்தலைவரும் அனுசரணையாளர்களூடாக ஒப்புக்கொண்ட விடயம்.

ஆகையால், அடுத்த சுற்றுப்பேச்சுக்களில் போர்நிறுத்த ஒப்பந்த நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்த பின்னர் அடுத்த பிரச்சினைகளுக்கு செல்வோம். எமது மக்களின் இயல்பு வாழ்க்கை மீளத்திரும்ப நாங்கள் ஒவ்வொரு படிநிலையாக செல்வோம்.

கேள்வி:- ஏப்ரல் பேச்சுக்களில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையை முன்வைக்க உள்ளீர்களா?

பதில்:- முதற்சுற்றுப் பேச்சுக்களின் முடிவுகள் தொடர்பாகவே 2 ஆம் சுற்றுப்பேச்சுக்கள் இருக்கும். 3 ஆம் சுற்றுப்பேச்சுக்களில் அதியுயர் பாதுகாப்பு வலயப்பிரச்சினை தொடர்பில் கவனமெடுக்கப்படும்.

யாழ். குடாநாட்டில் மட்டும் 30 வீத விவசாய நிலங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்திடம் உள்ளது. 1990 ஆம் ஆண்டிலிருந்து எமது மக்கள் சொந்த வீடுகளுக்குச் செல்லமுடியாத நிலையிருக்கிறது.

போர்நிறுத்த காலத்திலும்கூட அவர்கள் தங்களது வீடுகளுக்கு செல்வது தடைசெய்யப்பட்டிருக்கிறது.

போர்நிறுத்த ஒப்பந்த காலத்திலும் கூட எமது மக்கள் தங்களது வீடுகளுக்கு சுதந்திரமாக திரும்பமுடியாத சூழ்நிலையை நாம் மக்களின் பாரிய உரிமை மீறல்களாகவே பார்க்கிறோம். எமது மக்களின் வாழ்க்கையில் இயல்புவாழ்க்கை திரும்ப வேண்டும் என்று சர்வதேசத்தின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டது.

தங்கள் வீடுகளுக்கு திரும்புகின்ற உரிமையைக்கோர எமது மக்களுக்கு கண்டிப்பாக உரிமையுண்டு.

முதல்கட்டப் பேச்சுக்களில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு நிறைவேற்றப்பட்ட பின்னர் பாரிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த அதியுயர் பாதுகாப்பு வலயப்பிரச்சினையில் கண்டிப்பாகக் கவனமெடுப்போம்.

கேள்வி:- விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடும்வரை துணை இராணுவக்குழுவினரின் ஆயுதங்களைக் களைய வேண்டியதில்லை என்று பாதுபாப்பு அமைச்சு ஆலோசகர் கொட்டகதெனிய கூறியுள்ளாரே?

பதில்:- தமிழர் தாயகத்தில் பேரழிவுகளை ஏற்படுத்தியிருக்கும் அரச படையினரின் ஆயுதங்களை கொட்டகதெனிய களைந்து விட்டு, தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக் களைவு பற்றி பேசட்டும். தமிழ் மக்களைப் பாதுகாக்கவே நாங்கள் ஆயுதமேந்தி உள்ளோம். தமிழ் மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்கிவிட்டு- இலங்கை முழுமைக்குமான ஆயுதக்களைவை பேசட்டும்.

கொட்டகதெனிய போன்ற நபர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்களை பேசுவது பொருளல்ல.

இதுபற்றிப் பேசுவதற்கு அவர் சரியான நபரும் அல்ல. தமிழ் மக்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தும் அரச படைகளில் உள்ள ரவுடிக் கும்பல்களின் ஆயுதங்களை களைய வேண்யது அவசியம் என்பதை அவர் உணரவேண்டும்.

அதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக்களைவு பற்றி பேசலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கூடுதல் வாகன வசதிகளுடன் கொழும்பில் விசேட பொலிஸ் பிரிவு

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு—

கொழும்பில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக பொலிஸ் அவசர அழைப்பு பிரிவுக்கு புதிதாக 14 மோட்டார் சைக்கிள்களையும், 24 சைக்கிள்களையும் வழங்குவதற்கு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து - கொழும்பு நகரில் இரவு பகலாக பல சுற்றுப் பொலிஸ் ரோந்தைச் செயற்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கொழும்பு நகரில் பாதாள உலகக் குழுக்கள் உட்பட எந்தவொரு செயற்பாட்டையும் உடனடியாகக் கண்டு பிடிக்க முடியுமெனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கைக்கோன் தெரிவித்தார்.

அத்துடன் கொழும்பு நகரில் வாகன நெருக்கடியைக் குறைப்பது தொடர்பாகவும் பொலிஸ் மா அதிபர் எடுத்துள்ள நடவடிக்கைமூலம் மேலதிக இடவசதிகள் கிடைக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்புப் பொலிஸ் துறையின் படையணித் தலைமையகத்தில் பொலிஸ்மா அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின்போது இந்த மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டன.

களனி, நீர்கொழும்பு, நுகேகொட



மற்றும் கல்கிசை பொலிஸ் பிரிவுகளுக்குள்ளும் புதிய பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவு நிறுவப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் வழங்கப்பட்டதுடன் - தொடர்ந்து நாட்டிலுள்ள பல பொலிஸ் நிலையங்களுக்கும் இவற்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

# குருநாகல் பிரதேச சபைத் தேர்தலில் பெண்களைக்கொண்ட சுயேட்சைக்குழு!

கொழும்பு—

குருநாகல் பிரதேச சபைக்கு முற்றிலும் பெண் வேட்பாளர்களைக் கொண்ட சுயேட்சைக்குழு ஒன்று களத்தில் குதித்துள்ளது.

வடமேல் மாகாணத்தில் உள்ள குருநாகல் பிரதேச சபைக்கு மெழுகுதிரி சின்னத்தில் 28 பெண் வேட்பாளர்களைக் கொண்ட இந்த சுயேட்சைக்குழு களமிறங்கியுள்ளது.


இந்த சுயேட்சைக்குழு பெண்கள் உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் செயற்பாட்டாளரான எல்.பி. மாலினி என்பவரை தலைமை வேட்பாளராக கொண்டுள்ளது.

இது தொடர்பாக மாலினி கருத்து வெளியிடுகையில்:-

இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளதாகவும் நாட்டின் சனத்தொகையில் 52 வீதமான பெண்கள் உள்ளபோதும் -

நாடாளுமன்றத்தில் 04 வீத மான பெண்களே பிரதிநிதித்துவம் செய்ததாகவும், மாகாண சபைகளில் 1.7 வீதமான பெண்களின் பிரதிநிதித்துவம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

# தேர்தல் ஆணையாளர் திஸநாயக்க இன்று கட்சிச் செயலர்களுடன் சந்திப்பு



கொழும்பு—

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கும், அரசியற் கட்சிகளின் செயலாளர்களுக்குமிடையேயான விசேட கலந்துரையாடல் இன்று காலை தேர்தல் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில்லையென எடுத்த முடிவு குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க உத்தியோகபூர்வமாக கட்சிகளின் செயலாளர்களுக்குத் தெரிவிப்பார்.

அத்துடன், தற்போது நீதிமன்றால் தேர்தல் நடத்தக்கூடாதெனத் தடைவிதிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிறிதொரு தினத்தில் ஒரே திகதியில் தேர்தல் நடத்துவது தொடர்பாகவும், கட்சியின் செயலாளர்களுடன் அவர் கலந்துரையாடவுள்ளதாகவும் தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன் தேர்தல் ஆணையாளர் கட்சிகளின் செயலாளர்களைச் சந்திக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும். (தே)

## 119 தேர்தல் வன்முறைகள் பதிவு

கொழும்பு—

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் முடிவடைந்த நாள்முதல் இன்றுவரை 119 வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக - தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்களில் 46 சம்பவங்கள் பாரதூரமானவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 27 தாக்குதல் சம்பவங்களும், காயங்களை ஏற்படுத்தக்கூடிய 8 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கூடுதலான தேர்தல் வன்முறைகள் அனுராதபுரம் மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 11 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும், நுவரெலிய மாவட்டத்தில் 8 தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. (01)

# இரு இளைஞர்கள் ஹற்றனில் கைது!

கொழும்பு—

விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஹற்றனில் இரு இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் பிரசாரங்களுக்காக முக்கிய தலைவர்கள் அந்தப் பிரதேசத்துக்கு வருவதால் பெருமளவான பொலிஸார் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஹற்றன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன கமகே தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டிருக்கும் இரு நபர்களும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் -

நீதிமன்றத்தில் அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என் றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருட்டில் ஈடுபட்ட குழு பொலிஸாரிடம் சிக்கியது

மட்டக்களப்பு—

மட்டக்களப்பில் இராணுவ சீருடைகளுடன் பாரிய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்த ஆயுதக் குழுவொன்றை காத்தான்குடி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ஆயுதங்கள், இராணுவத் தரப்பினர் அணியும் சீருடைகளை ஒத்த உடைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி, ஒரு தொகுதிப் பணம் என்பவற்றை தாம் கைப்பற்றியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தக்குழுவினரே அண்மையில் இடம்பெற்ற பாரிய கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களாக இருக்கலாம் எனவும், இவர்களிடமிருந்து பெறப்படும் தகவல்களில் மேலும் சில உண்மைகள் வெளிவரலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மும்பை டெஸ்ட் போட்டியில் வெற்றிபெறுமா இந்தியா?



மும்பை —

இந்திய - இங்கிலாந்து அணிகளுக் கிடையே மும்பையில் நடைபெற்று வரும் மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இனிங் ஸில் 191 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடி வில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் டுக்களை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் ஷா 15, உடல் 2 ஓட்டங் களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர். நேற்று இவர்கள் ஆட்டத்தைத் தொட ர்ந்தவேளை, உடல் 14 ஓட்டங்களைப் பெற்று பதான் வீசிய பந்தை ஜாபரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பீற்றர்சன் களமிறங்கி னார். அவர் 7 ஓட்டங்களுடன் கும்ளே வீசிய பந்தை அவரிடமே பிடிகொ டுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கொலிங்வூட் களமி றங்க, 4 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஷா - ரன் அவுட்டானார்.


அவரையடுத்து பிளின்ரொப், கொலிங்வூட்டுடன் இணைந்தார். இவர்கள் இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். அந்த வேளை, 3 பவுண்டரிகள் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற்றிருந்த கொலிங்வூட் - ஹர்பஜன் சிங் வீசிய



பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஜோன்ஸ் 3 ஓட்டங்களைப் பெற்று ஹர்பஜனின் பந்திலும், ஹொகாட் 6 ஓட்டங்களுடன் கும்ளே வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து அன்டர்சன் களமிறங்க - 6 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த பிளின் ரொப் - கும்ளே வீசிய பந்தை டோனி



யிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக பன்சர் களமிறங்கினார். ஆனால், அன்டர்சன் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, கும்ளே வீசிய பந்தை ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


இதனால் இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 191 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட் டுக்களையும் இழந்தது.

ஆடுகளத்தில் ஓட்டமெதையும் பெறாதிருந்த பன்சர் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் கும்ளே 4, ஹர்பஜன் சிங் 2, பதான், பட்டேல், ஶ்ரீசந்த் மூவ ரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.


தொடர்ந்து 313 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் களமிறங்கியது. ஜாபரு டன், பதான் ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்கினார்.

ஆனால், ஸ்கோர் 6ஐத் தொட்ட வேளை, 6 ஓட்டங்களைப் பெற்றி



ருந்த பதான் - அன்டர்சன் வீசிய பந்தில் போல்டானார்.

அடுத்து கும்ளே களமிறங்கினார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் இந்



திய அணி 1 விக்கெட்டை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் ஜாபர் 4, கும்ளே 8 ஓட் டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக் காதிருந்தனர்.

இன்று இறுதி நாளாகையால், இந்திய அணி வெற்றிபெறுவதற்கு இன்னும் 295 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளநிலையில் - போட்டி யின் முடிவு குறித்து பலவிதமான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்தப் போட்டியில் இந்தியா வெற்றிபெற்றால், 2:0 என்ற அடிப்ப டையில் தொடரைக் கைப்பற்றும். ஆனால், இங்கிலாந்து வெற்றிபெற் றால் தொடர் சமனாகும். வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தால், இந்தியா 1:0 என்ற அடிப்படையில் தொடரை வெல்லும்.

## விளையாட்டு

### பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி பதக்க பட்டியல்

அவுஸ்ரேலியா —

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் பொதுநலவாய நாடுகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டியின் பதக்க பட்டியல் வெளியாகியுள்ளது.

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அவுஸ்ரேலியா | 53 | 47 | 41 | 141 |
| இங்கிலாந்து | 21 | 25 | 20 | 66 |
| இந்தியா | 14 | 9 | 4 | 27 |
| கனடா | 11 | 20 | 16 | 47 |
| தென்னாபிரிக்கா | 9 | 4 | 10 | 23 |
| ஸ்கொட்லன்ட் | 8 | 6 | 9 | 23 |
| ஜமைக்கா | 4 | 2 | 2 | 8 |
| மலேசியா | 3 | 3 | 4 | 10 |
| நியூஸிலாந்து | 2 | 4 | 10 | 16 |
| நைஜீரியா | 2 | 3 | 2 | 7 |
| கென்யா | 2 | 3 | 1 | 6 |
| வேல்ஸ் | 2 | 1 | 6 | 9 |
| சிங்கப்பூர் | 1 | 2 | 3 | 6 |
| சைபிரஸ் | 1 | 1 | 1 | 3 |
| பப்புவா நியூகினியா | 1 | 1 | 0 | 2 |
| பாகிஸ்தான் | 1 | 0 | 1 | 2 |
| கானா | 1 | 0 | 0 | 1 |
| இலங்கை | 1 | 0 | 0 | 1 |
| தன்சானியா | 1 | 0 | 0 | 1 |

## 2ஆவது ஒருநாள் போட்டி; பங்களாதேஷ் அபார வெற்றி



குல்னா —

பங்களாதேஷ் - கென்ய அணிகளுக் கிடையே நேற்று குல்னாவில் நடை பெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வ தேச போட்டியில் பங்களாதேஷ் அணி 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கென்ய அணி முதலில் துடுப்பெடுத் தாடக் களமிறங்கியது. அந்த அணி யின் ஓரினோவும், ஒபுயாவும் ஆரம்ப ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் ஓரினோ ஸ்கோர் 3ஆக இருக்கும்போது ஒரேயொரு ஓட் டத்தை மட்டும் பெற்று ரசல் வீசிய பந் தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்ட மிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஓமா 2 ஓட் டங்களுடன் மொட்ராசாவின் பந்தி லும், ஏ.சுஜி 11 ஓட்டங்களைப் பெற்று ரசலின் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

அவர்களையடுத்து மொடி களமி றங்கினார். ஒபுயாவும், மொடியும் ஓர ளவுக்கு நிலைத்து ஆடினர். அந்த வேளை, 30 ஓட்டங்களைப் பெற்றி ருந்த ஒபுயா - ரபீக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமி ழந்தார்.

தொடர்ந்து ஓடோயோ களமி றங்கினார். இந்தநிலையில் 5 பவுண் டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த மொடி - ரசாக்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக மிஷ்ரா களமிறங்க, 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஓடோயோ கபாலியின் பந்தில் ஆட்ட மிழந்தார்.

அவரையடுத்து கமாண்டே களம் புகுந்தார். சற்று நேரத்தில் 33 ஓட் டங்களைப் பெற்றிருந்த மிஷ்ரா ரன் அவுட்டானார்.

பின்னர் பட்டேல் 0, கமாண்டே 12, எம்.சுஜி 7 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்க கென்ய அணி 49.5 ஓவர் களில் 161 ஓட்டங்களுக்குள் சகல விக் கெட்டுக்களையும் இழந்தது.

இறுதியாக களமிறங்கிய ஒன் கொண்டோ 3 ஓட்டங்களுடன் இறுதி வரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ரசல் 3, மொட்ராசா, ரசாக் ஆகியோர் தலா 2, ரபீக் 1 விக் கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 162 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் அணி களமிங்கியது. அந்த அணியின் ஜாவிட் ஓமரும்,



நபீஸும் ஆரம்ப ஆட்டக்காரர்களாகக் களமிங்கினர்.

இவர்களில் நபீஸ் 3 பவுண்டரி கள் அடங்கலாக 28 ஓட்டங்களைப் பெற்று ஒன்கொண்டோ வீசிய பந்தை ஒபுயாவிடம் பிடிகொடுத்து ஆட்டமி ழந்தார்.

அடுத்து அப்ரப் அகமட் களமிறங் கினார். ஓமரும், அகமட்டும் இணை ந்து பங்களாதேஷ் அணியின் வெற் றியை உறுதிசெய்தனர்.

பங்களாதேஷ் அணி 23.5 ஓவர் களிலேயே 162 ஓட்டங்களைப் பெற் றதனால், 9 விக்கெட்டுக்களால் அபார மான வெற்றியைப் பெற்றது.

ஆடுகளத்தில் ஓமர் 11 பவுண்டரி கள் அடங்கலாக 64 ஓட்டங்களுட னும், அகமட் 31 பந்துகளில் 9 பவுண் டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 59 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்ட மிழக்காதிருந்தனர்.

## கபடிப் போட்டியில் கலைமதி சம்பியன்

வடமராட்சி —

கரவெட்டி பிரதேச செயலக விளை யாட்டுத் துறையின் அனுசரணை யுடன் நடத்தப்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் நவிண்டில் கலை மதி அணி சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இந்தப் போட்டி கரவெட்டி பிரதேச செயலகத்திலிருந்து தெரிவு செய் யப்பட்ட கம்பர்மலை யங்கம்பன்ஸ், வதிரி பொமேர்ஸ், வல்வெட்டி சிவகுமா ரன், நவிண்டில் கலைமதி ஆகிய 4 கழகங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டியிலேயே நவிண்டில் கலை மதி அணி சம்பியனானது.

நேற்றுமுன்தினம் நவிண்டில் கலைமதி விளையாட்டரங்கில் - விளையாட்டுத் தலைவர் க.கிருஷ் ணானந்தன் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக நவிண்டில் கலைமதி சனசமூக நிலையத் தலைவர் கி.யோகேந் திரன், விளையாட்டுச் செயலாளர் குலம் சத்தியசீலன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (12)

## யாழ்.கோட்டமட்டத்திலான மெய்வல்லுனர் போட்டிகள்

யாழ்ப்பாணம் —

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட யாழ்ப்பாண கோட்ட பாடசாலைக ளுக்கிடையிலான இந்த வருட மெய் வல்லுனர் போட்டிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை யாழ்.கோட்டக் கல்வி அலுவலகம் துரிதமாகவும், சிறப்பாகவும் மேற் கொண்டு வருகின்றது.

இந்தப் போட்டிகள் நாளையும், நாளைமறுதினமும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்துவதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்த வருடம் யாழ்.கோட்ட மெய் வல்லுனர் போட்டிகளைச் சிறப்பிக் கும் முகமாக பாடசாலைகளின் பாண்ட் வாத்திய இசைக் குழுக்கள் - போட்டி ஆரம்பத்தின் பொழுது மைதா னத்தில் அணிவகுத்துவர இருப்பதா கவும், மாணவர்களின் உடற்பயிற் சிக் கண்காட்சியும் இடம்பெற இருப் பதாகவும் யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ் தங்கராசா தெரிவித்தார்.

மேலும் இந்த வருடம் கோட்ட மட்டத்தில் வெற்றிபெறும் வீரர்க ளுக்கு சான்றிதழ்களும், முதன்மை வீரர்களாகத் தெரிவு செய்யப்படும் வீரர்களுக்கு வெற்றிக் கேடயங்களும் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (58)

## எல்லே, கிரிக்கெட் போட்டிகளில் மனோகரா அணி சம்பியன்

வடமராட்சி —

கரவெட்டி பிரதேச செயலகத்திற் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங் களுக்கிடையிலான பெண்களுக் கான எல்லே, துடுப்பாட்ட சுற்றுப் போட் டிகளில் மனோகரா அணி சம்பியன் பட்டத்தை வென்றது.


முதலில் எல்லே இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து வதிரி பொமேர்ஸ் அணி மோதியது. இந்த ஆட்டம் 2 இனிங்ஸ் முறையில் நடைபெற்றபோது - முத லாவது இனிங்ஸில் அல்வாய் மனோ கரா அணியின் வீராங்கனை கு.சோமா வதி 4 ஓட்டங்களைப் பெற்றுக்கொ டுத்தார்.

வதிரி பொமேர்ஸ் அணியினர் எதுவித புள்ளிகளையும் பெறாத நிலையில் முதல் இனிங்ஸ் ஆட்டம் நிறைவு பெற்றது.

அதைத் தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸிலும் வதிரி பொமேர்ஸ் அணியினரை எதுவித ஓட்டமும் எடுக்கவிடாத மனோகரா அணியி னர், 4:0 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றி கொண்டனர்.

அதேபோல் பெண்களுக்கான மென் பந்து துடுப்பாட்டத்திலும் பொமேர்ஸ் அணியினர் 56 ஓட்டங்களைப் பெற்றபோது - பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய மனோகரா அணி, 57 ஓட் டங்களைப் பெற்று சம்பியன் கிண் ணத்தை தனதாக்கிக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை




## பகுதி - I

✳ கீழே நான்கு வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அதன்படி பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

01. A= குளிக்கிறேன் 02. B= விளையாடுகிறார்கள்
03. C= கோயிலுக்குச் சென்றார் 04. D= பாடசாலைக்குச் சென்றாள்


1. இங்கு A என்பது -
   1. அவள் 2. நான் 3. அம்மா 4. மாலா
2. இங்கு B என்பது
   1. நாங்கள் 2. நீங்கள் 3. அவர்கள் 4. அவர்
3. இங்கு C என்பது -
   1. அவர் 2. நாம் 3. அவர்கள் 4. அவள்
4. இங்கு D என்பது -
   1. நான் 2. அவர் 3. அவள் 4. நீ

✳ சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக


05. 1. சவர்க்காரம் 2. சவுக்காரம் 3. சவர்காரம் 4. சவற்காரம்
06. 1. தொளிலாளர் 2. தொழிலாளர் 3. தொலிளாலர் 4. தொழிளாலர்

✳ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக

07. நிலத்தின் கீழ் வாழும் கண்ணில்லாத விலங்கு
1. பூச்சி 2. அட்டை 3. மண்புழு 4. தவளை


08. 

இவ்வுருவின்படி D யின் பரப்பரளவு A யின் பரப்பளவைப் போல் எத்தனை மடங்காகும்.
1. 7 மடங்கு 2. 4 மடங்கு 3. 2 மடங்கு 4. 6 மடங்கு

09. 
6 cm
இவ்வுருக் காட்டும் செவ்வகத்தின் நீளம் அகலத்தைப் போல் மூன்று மடங்காகும். அதன்படி செவ்வகத்தின் அகலம் யாது?
1. 6 cm 2. 2 cm 3. 3cm 4. 18 cm

10. தாயின் மறைவைத் தாங்க முடியாத பிள்ளைகள் உண்ணாமல் குடிக்காமல் பல நாட்களாக அழுது புரண்டனர். மறைவை என்பதன் ஒத்தசொல்
1. நோய் 2. வேதனையை 3. பிறப்பை 4. இறப்பை

✳ வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து கோடிடுக.

11. 
1. 2. 3.

✳ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான சரியான விடையைத் தெரிந்து கீறிடுக

12. இக்கூடுகளில் உள்ள எண்களை நேராகவும் மேலிருந்து கீழாகவும் கூட்டும்போது ஒரே கூட்டுத்தொகை வரும் வகையில் வெற்றுக்கூடுகளில் அமையக்கூடிய எண் களைக் கொண்ட விடையாது?

| | | |
|---|---|---|
| 2 | | 6 |
| 8 | | 1 |
| 2 | | 5 |

1. 4 / 3 / 2
2. 6 / 1 / 4
3. 3 / 4 / 5

13. இக்கூடுகளில் உள்ள எண்களைக் குறுக்காகவும், மேலிருந்து கீழாகவும் கூட்டும்போது ஒரே கூட்டுத்தொகை வரும் வகையில் வெற்றுக்கூட்டினுள் அமையக்கூடிய எண்களைக் கொண்ட விடையாது?

| | | |
|---|---|---|
| | 5 | 6 |
| 3 | | 5 |
| | 3 | 4 |


1. | 1 | 4 | 3 | 2. | 7 | 5 | 4 | 3. | 4 | 7 | 8 |

✳ பின்வரும் பிரசினங்களில் முதல் கூட்டிலுள்ள இரண்டு எண்களுக்கப் பதிலாக ஈடுபடுத்தக்கூடிய எண்களைக் கொண்ட கூட்டைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

14. 12 + [8 + 15] = 35
1. [18 + 5] 2. [10 + 15] 3. [15 × 2] 4. [35 - 10]

15. 2 × [30× 10] = 600
1. [30 + 10] 2. [30 ÷ 10] 3. [100 × 3] 4. [3× 10]

16. இவ்வுருக்களில் மூன்று ஏதோ ஒரு வகையில் ஒரே மாதிரியானவை. வித்தியாசமான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.


1. 2. 3. 4.

✳ பின்வருவனவற்றுக்குச் சரியான விடையைத் தெரிந்து கீறிடுக

17. மின்சக்தியை வெப்பசக்தியாக மாற்றும் சாதனம்
1. மின்சூழ் 2. மின்விசிறி 3. மின்னழுத்தி

18. நீலவானிலே கரிய குருவி ஒன்று வேகமாகப் பறந்தது. இந்த வாக்கியத்தில் உள்ள எழுவாய் அடைமொழி எது?
1.. நீல 2. குருவி 3. கரிய

19. வளியின் பண்பு அல்லாதது எது?
1. வளிக்கு இடத்தை அடைக்கும் தன்மை உண்டு.
2. நீரிலும் பார்க்க அடர்த்தி கூடியது.
3. வளிக்கு அமுக்கும் தன்மை உண்டு.

20. மனித சக்தியை மட்டும் கொண்டு இயக்கப்படும் உபகரணம் பின்வருவனவற்றுள் எது?
1. விமானம் 2. முச்சக்கரவண்டி 3. தள்ளுவண்டி

21. தாவரங்களின் இளங்கொழுந்துகளின் கீழ்ப் பகுதியில் முட்டையிடும் பிராணி யாது?
1. எறும்பு 2. வண்ணாத்திப்பூச்சி 3. இலையான்

22. தனது உடலின் வர்ணத்தைத் தேவைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் பிராணி எது?
1. ஆமை 2. ஓணான் 3. பல்லி

23. பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை வாங்கும் போது பாவனையாளர் கவனிக்கவேண்டிய விடயம் எது?
1. SLS குறியீடு 2. நிறை 3. காலாவதியாகும் திகதி


24. மதத்தினால் ஆன இனம் யாது?
1. இந்து 2. பௌத்தம் 3. இஸ்லாம்

25. காற்றின் திசையை அறிய உதவும் கருவி எது?
1. காற்றுமானி 2. திசையறி கருவி 3. காற்றுத் திசைகாட்டி


✳ பின்வருவனவற்றில் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் எழுதுக

26. எல்லா மலர்களும் காலையிலேயே மலர்கின்றன. (..........)
27. எல்லாப் பயிர்களும் விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்வதில்லை. (..........)
28. நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு கண்டம் எனப்படும். (..........)
29. இரும்பை உருக்குவதற்கு கம்மாலை பயன்படுத்தப்படுகிறது. (..........)
30. குருவிச்சை ஒரு ஒட்டுண்ணித் தாவரமாகும். (..........)


31. பாலைவனக் கப்பல் எனப்படுவது


1. 2. 3 4.


32. பூர்வபக்க பிறையானது


1. 2. 3 4.

33. இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன் எனப்படுவது


1. 2. 3 4.

34. சரியான சுற்று


1. 2. 3 4.


35. செயற்கை மூளை எது



1. 2. 3 4.


36. செவ்வக எண் யாது?


| 4 | 8 | 9 | 16 |
|---|---|---|---|
| 1. | 2. | 3 | 4. |

✳ கீழ்க் காணப்படும் ஒவ்வொரு உருவும் காட்டும் பொருளின் பெயரை அருகில் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

37. 
..................................

38. 
..................................

39. 
..................................

40. 
..................................

## பகுதி - II

☆ பின்வரும் பந்தியை வாசித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

இந்த முறை எசல பௌர்ணமிக்கு முன்பு பியாஸ் ஊர்வந்தபோது முன்பு எப்போதும் கொண்டு வராத அளவுக்கு சிற்றுண்டிப் பண்டங்கள் கொண்டு வந்தான். மறுநாள் அதிகாலையில் பெரிய மாட்டுவண்டி ஒன்று காலி.திசா,அனுலா,பண்டா,பியாஸ்சின் அம்மா உட்பட ஏழு பேர் விகாரையை நோக்கி மலர் பூசை செய்வதற்குச் சென்றார்கள். ஆண்கள் வண்டிக்குப் பின்னால் நடந்து வந்தார்கள். வண்டியில் கட்டப்பட்டிருந்த லாந்தர் விளக்கின் ஒளியால் வண்டியின் அடிப்பகுதியில் இருந்த இருள் சற்று அகன்றிருந்தது. ஆனால் வெளிப்புறத்தில் இன்னும் இருள் இருந்தது. தாங்கள் பயணம் செய்வது இரு மருங்கிலும் கடைகளும் வீடுகளும் செறிந்த ஒரு பாதையினூடாகத்தான். எனது வண்டியின் உள்ளே தூங்குவோருக்கும் வெளியில் நடந்து வருவோருக்கும் விளக்கியதாகத் தெரியவில்லை. ஏனெனில் வெளியில் கும் இருட்டு எங்கும் பரவி இருந்தது. இரவில் மெதுவாகச் செல்லும் புகையிரதம் எழுப்பும் ஓசையைப் போலவே கடல் அலைகள் எழுப்பும் ஓசையும் கேட்டுக் கொண்டேயிருந்தன.

(1) 1. பியாஸ் ஊருக்கு வரும் போது எதைக் கொண்டு வந்தான்?
..................................

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

2. இவர்கள் எங்கு பயணம் செய்தார்கள்?
.....................................................................................

3. இந்தப் பயணத்தில் எத்தனை பேர் சென்றார்கள்?
.....................................................................................

4. பயணம் செல்லுவதற்குப் பயன்படுத்திய வாகனத்தின் பெயர் யாது?
.....................................................................................

5. புகையிரதத்தின் ஓசை போல் எவற்றின் ஓசை எழும்பியது?
.....................................................................................

6. இவர்கள் பயணத்தின் போது இருளாக இருந்த படியால் வெளிச்சத்துக்கு எதனைப் பயன்படுத்தினார்கள்?
.....................................................................................

பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக

7. அடிப்பகுதியில்-............................+..........................

8. அகன்றிருந்தது-............................+..........................

9. வந்தார்கள் என்பதன் எதிர்காலம் யாது?
.....................................................................................

10. இவர்கள் சென்ற விகாரை எம் மதத்தைச் சேர்ந்தது?
.....................................................................................

(2) பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துடைய சொல் தருக.

1.பௌர்ணமி.................................. 2.இருள்..............................

3.வெளிப்புறம்.................................. 4.முன்பு..............................

(3) பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துடைய சொல் தருக?

1.பாதை.......................... 2.ஓசை..............................

3.கடல்.......................... 4.பயணம்..........................

(4) ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் புத்தகம் வழங்குவதற்காக விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழாக் கருமங்களை ஒழுங்கு படுத்துவதற்காக அமைக்கப்பட்ட தகவல் அட்டவணை ஒன்று கீழேதரப்பட்டுள்ளது.

| தரம் | வகுப்புக்களின் எண்ணிக்கை | மொத்த மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 3 | 120 |
| 2 | 4 | 138 |
| 3 | 5 | 210 |
| 4 | 3 | 130 |
| 5 | 5 | 220 |

1. பாடசாலையில் தரம் ஒன்று தரம் மூன்றிலுள்ள மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
.....................................................................................

2. தரம் 1, இலுள்ள 3 பிரிவில் 120 பிள்ளைகள் உள்ளனர். ஒரு பிரிவில் எத்தனை பிள்ளைகள் இருப்பார்கள்?
.....................................................................................


3. எல்லா வகுப்பிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
.....................................................................................

4. 5 ஆம் தர மாணவர்களுக்கு, ஒரு மாணவருக்கு 5 புத்தகங்கள் வீதம் கொடுப்பதற்கு மொத்தமாக எத்தனை புத்தகங்கள் தேவை?
.....................................................................................

5. பாடசாலையிலுள்ள வகுப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது?
.....................................................................................

6. 1லீற்றர் 500 மில்லி லீற்றர் கனவளவுள்ள்குளிர்பானம் 6 மாணவர்களிடையே சமமாகப் பங்கிட்டால் ஒரு மாணவனுக்கு கிடைக்கும் குளிர்பானத்தின் அளவு யாது?
.....................................................................................

7. 250 கிராம் கரட்டின் விலை ரூபா 15 ஆகும். 1 கிலோ 500கிராம் கரட்டின் விலை யாது?
.....................................................................................

8.  பின்வரும் உருவில் நிழற்றப்படாத பகுதிகளை முழு உருவின் பின்னமாக எழுதுக?
.....................................................................................


9. ஒரு நோயாளிக்கு ஒரு தடவை 2 மாத்திரைகள் வீதம் ஒரு நாளுக்கு 3 தடவைகள் கொடுப்பதற்கு 30 மாத்திரைகள் வழங்கப்பட்டன. இந்த மாத்திரைகள் எத்தனை நாட்களுக்கு போதுமானது?
.....................................................................................

10. ரூபா 82 பெறுமானமுள்ள பொருட்களை வாங்கிய சுதன், வியாபாரியிடம் ரு.100 தாள் ஒன்றையும் ரூ.2 நாணயம் ஒன்றையும் கொடுத்தார். அவனுக்கு கிடைக்க வேண்டிய மீதிப் பணம் எவ்வளவு?
.....................................................................................

(5) பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் 'சரி' எனவும் ,பிழையாயின் 'பிழை' எனவும் எதிரே உள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. உலோகக் கோலொன்றின் ஒரு முனையைத் தீயில் பிடிக்கும் போது மற்றைய முனையும் படிப்படியாக வெப்பமடையும். (........)
2. கித்துள் மரம் ஆணிவேர் உள்ள மரமாகும். (........)
3. ஒரு சாதாரண கடிதத்தை அஞ்சலில் இடுவதற்கு ரு.4.50முத்திரை ஒட்ட வேண்டும். (........)
4. குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை ஆந்தை ஆகும். (........)
5. கடலாமை கடல் நீரில் முட்டை இடும். (........)
6. ஒட்டகம் வாரக் கணக்கில் தண்ணீர் குடிக்காமல் வாழும் (........)
7.  இது சங்கிலித் தையல் ஆகும். (........)
8. திரவ நிலையில் உள்ள உலோகம் இரசம் ஆகும். (........)
9. இலங்கையில் பிறிமா ஆலை அமைந்துள்ள இடம் மட்டக்களப்பு ஆகும். (........)
10. அம்பேவல என்னும் இடத்தில் பால் பதனிடும் கூட்டுத்தாபனம் அமைந்துள்ளது. (.........)

(6) ஒரே மாதிரியான ஐந்து மெழுகுதிரிகள் எரிய விடப்பட்டு ஒரே நேரத்தில் ஐந்து பாத்திரங்களினால் மூடப்படுகின்றன. பாத்திரங்கள் யாவும் அதன் வடிவம், உயரம்,அகலம் என்பவற்றில் வேறுபட்டவை.



A B C D E

1. முதலில் அணையும் மெழுகுதிரி யாது?......................
2. இறுதியில் அணையும் மெழுகுதிரி யாது?....................
3. முதல் அணையும் பாத்திரத்துக்கு என்னகுறைபாடுள்ளது?..............................
4. மெழுகுதிரிகள் பாத்திரத்துக்குள் தொடர்ந்து எரியுமா?..............................
5. மூன்றாவது அணையும் பாத்திரம் எது?.........................................

(7) பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. பற்சில்லுகள் கொண்ட உபகரணம் எது?
   1. வண்டில் 2. மணிக்கூடு 3. கப்பி
2. அடிக்கடி விலையில் மாற்றமேற்படும் உணவுப் பொருள்.
   1. உப்பு 2 . கொத்தமல்லி 3. மீன்
3. திசையறி கருவியின்றி பகலில் திசையை அறியப்பயன்படுவது.
   1. சந்திரன் 2. சூரியன் 3. நட்சத்திரம்
4. திசைகாட்டியை முதலில் கண்டறிந்த நாட்டினர் யார்?
   1. இந்தியர் 2. பிரான்சியர் 3. சீனர்
5. மண்புழு சுவாசிப்பது
   1. தோலினால் 2. நுரையீரலினால் 3. பூவினால்
6. சூரியனில் இருந்து மிகத் தொலைவில் உள்ளகோள்.
   1. புளூட்டோ 2. புதன் 3. வியாழன்
7. மனித வலுவினால் இயங்கும் போக்குவரத்து சாதனம் யாது?
   1. மோட்டார் சைக்கிள் 2. துவிச்சக்கர வண்டி 3. கார்
8. மாலை வேளையில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?
   1. வல்லாரை 2. வாழையிலை 3. பொன்னாவரை
9. கற்பக தரு என அழைக்கப்படும் மரம் எது?
   1. தென்னை 2. கமுகு 3. பனை
10. பாம்பை ஆடவைப்பதற்கு பயன்படும் கருவி எது?
   1. தென்னை 2. மகுடி 3. நாதஸ்வரம்

(8) பின்வரும் ஆங்கிலச் சொற்களை தமிழ்ச் சொற்களில் எழுதுக?

1.Rabbit.................................. 2.Butterfly..........................................

3.Fruit.................................... 4. Duster ..........................................

*விடைகள் - அடுத்தவாரம்.*

*ஆசிரியர்* - T.அம்பிகைபாகன் ஆசிரிய ஆலோசகர்
மேல்மாகாண கல்வித் திணைக்களம்.
B Ed Spl Trd Tamil.

## சென்றவார விடைகள்...

*(01) 2 (02) 3 (03) 3 (04) 3 (05) 1 (06) 3 (07) 3 (08) 2 (09) 4 (10) (i) 3 (ii) 2 (11) (i)2 (ii)2 (12) 1(13) 2(14) 3 (15)1 (16) (i) 3 (ii) 3 (iii) 3 (17) (i) 1 (ii) 2 (18) 1 (19) 3 (20) 4 (21) 3 (28 -14) (22) (i) 2 (23) (i) சோமா,சீமா (ii)1 (24) 3 (25) 1 (26) (i) 1 (ii) 3 (iii)1 (27) 4 (28) 3 (29) 1 (30) 2 (31) 2 (32) (i)1 (ii)3 (33) 1 (34) 1 (35) (i)3 (ii)2 (36) 3 (37) 3 (38) 3 (39) 1 (40) (i) 3 (ii) 1*

### வினாத்தாள் - 02

01. (01) கல்வியின் முக்கியத்துவம் (02) உயர்வு
(03) உலகம் - பரணி,அன்பு - நேசம்
(04) உண்மை-பொய், பகைவர்-நண்பர் (05) திட்டவட்டம்
(06) கூறியுள்ளார், துணைபுரிதல், வாழுதல், ஊறுதல், தோண்டுதல்
(07) நாம்
(08) மணலில் தோண்டிய அளவுக்கு நீர் ஊறுவது, கல்வியின் அளவுக்கு அறிவு ஒப்பிடப்படுகிறது
(09) அன்பு,பண்பு,பயன்,உண்மை போன்ற மனிதப் பண்புகளை வளர்க்க முடியும்
(10) சாந்தி,சமாதானம்

02. (1) கிருஷ்ண தேவராயன் ஆட்சியில் தெனாலிராமன் விகடகவியாக அங்கம் வகித்தான்.
(2) நான் பிறந்த சூழல் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது

03. (1) நலங்கள் (2) லங்கா (3) புகழ் (4) நறுஞ்சோலை

04. (1) மகன் சிவலிங்கத்தினால் அம்மாவுக்கு எழுதப்பட்டது
(2) மகன்,தாய்
(3) படித்து வைத்தியனாகுதல்,தங்கையை நல்ல முறையில் வாழவைத்தல், தாயைக் கண்கலங்காமல் பாதுகாத்தல்.

05. (1) முயற்சி (2) சரணாலயம்

06. (1) பௌத்தம் (2) இந்து (3) கிறிஸ்தவம் (4) இஸ்லாம்

07. (1) தயவு செய்து அமைதி (2)பிறந்த நாள் வாழ்த்துக்கள்
(3) எல்லாம் நல்லவைகளாக அமையட்டும்

08. (1) **Police Station** (2) **Telephone** (3) **Music Room**

09. (1) புகையிரதம் (2) உறவினர்

10. (1) கிறிடாபிட்டிய (2) மொனரா

11. (1) ஊக்கம் (2) நதி 12. B 13. (1) ஆம் (2) இல்லை
14. (1) 2 (2) 5 (3) 6 (4) 4 (5) 7
15. (1) குவளையினுள் வளி உள்ளதனால் நீர் உள்ளே செல்லவில்லை
16. 1 17. 2 18. 2
19. (1) ஆகாயத் தாமரை (பிஸ்டியா) (2) 1948 பெப்ரவரி 4ஆம் திகதி
20. (1) ஆகாயத் தாமரை (பிஸ்டியா) (2) தொட்டாற் சிணுங்கி
(3) பிரண்டை (4)தாழை
21. (a) காபோவைத்தரேட் (b)புரதம் (c) விட்டமின்
22. (1)மேசன் (2) தச்சன்
23. தாவரவுண்ணி: (1) மாடு (2) மான் (3) முயல்
அனைத்துமுண்ணி: (1) பூனை (2) காகம் (3) நாய்
ஊனுண்ணி: (1) புலி (2) சிங்கம் (3) முதலை
24. 40 25. 4 26. 2 27. (1) தமிழர்கள் (2) முஸ்லிம்கள்
(3) தர்ம உபதேசம்

28. (1) சீனி, பாண், ரின்மீன், லக்ஸ்பிறே, தேயிலை, சவர்க்காரம்
(2) சீனி, லக்ஸ்பிறே, பாண், தேயிலை (3) 92.00
29. 470 30. (1) 425 (2) 120 31. 40 32. (1) 6(2) 12
33. 117 km 34. 8.00
35. (1) ஜேம்ஸ்ராஜா (2) சென்ஜேம்ஸ் கல்லூரி, களுத்துறை
(3) 53, கொம்பனித்தெரு, கொழும்பு 2 (4) 5.8.2000 (5) ஆசிரியர்
36. I, IV 37. 162 38. (1) 08/20 (2) 20 $cm^2$
39. 4500.00 40. சரியான விடைகளைக் கவனத்திற் கொள்ளவும்

## விக்கிரகங்கள் பிரதிஷ்டை

உடுவில் —

யாழ்ப்பாணம் வண்ணை நாச்சிமார் கோவிலில் பிரதிஷ்டை செய்வதற்கென முதன் முதலாக விஸ்வ பிரம்மா, மாரி அம்மன் ஆகிய தாமிர விக்கிரகங்கள் இந்தியாவிலுள்ள ஸ்தபதி தேவசேனாதிபதியால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த விக்கிரகங்கள் எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்துக்கு முன்னதாக யாழ்ப்பாணம் பாஸ்கரன் சிற்பாசார நிலையத்திலிருந்து ஊர்வலமாகக் கோவிலுக்கு எடுத்துவரப்படவுள்ளன. (101)

## குடாநாட்டில் மூன்று கட்டங்களாக சமுர்த்தி அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் மூன்று கட்டங்களாகச் சமுர்த்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சமுர்த்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் சமுர்த்தி அதிகாரசபையால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் பிரதேச செயலாளர்களிடையே கட்டம் கட்டமாகச் செயற்படுத்தப்படவுள்ள இந்தவேலைத் திட்டங்களுக்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வேலைத்திட்டங்களை செயற்படுத்த வறுமை விகிதாசாரப்படி மூன்று கட்டங்களாக பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் முதலாம் கட்டத்தின் கீழ் சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களும் இரண்டாம் கட்டத்தின் கீழ் சங்கானை, வேலணை, ஊர்காவற்துறை ஆகிய பிரதேச செயலகங்களும் - மூன்றாவது கட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை, தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உடுவில், நெடுந்தீவு, மருதங்கேணி, காரைநகர் ஆகிய பிரதேச செயலகங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகளின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு அவர்களுக்கு சுய தொழில் வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், குடிநீர்க் கிணறுகள் மற்றும் சுகாதார பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மலசலகூட வசதிகளை உருவாக்குதல்,

வீடமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், கிராமிய எழுச்சி வேலைத் திட்டங்கள், விவசாயம், மிருகவளர்ப்பு, மீன்பிடி, சந்தைப்படுத்துதல், மனிதவள அபிவிருத்தி, சமுர்த்தி மகாசங்கங்களை மேம்படுத்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ரி)

## நிலைத்தகு நகர நிகழ்ச்சித்திட்ட கூட்டம்

யாழ்ப்பாணம் —

நிலைத்தகு நகர நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான நகர கலந்தாலோசனைக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்தாலோசனைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் நகர பக்கப்பார்வை அறிமுகம் செய்யப்பட்டு கலந்தாலோசனை இடம்பெறும்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தில் நிலைத்தகு வேலைத்திட்ட தேசிய தொழில்நுட்ப ஆலோசகர் டொக்டர். பாமி இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பகுதி சேதமடைந்த வீடுகளுக்கான இரண்டாம் கட்ட கொடுப்பனவு

வடமராட்சி —

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்குப்பிரதேசத்தில் பகுதியளவு சேதமடைந்த வீடுகளுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு எதிர்வரும் 31 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் தெரிவித்தார்.

சுனாமியால் பகுதி சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கான முதற்கட்டக் கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் கொடுப்பனவுக்கான புனரமைப்பு வேலைகள் யாவும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக பூர்த்திசெய்யப்பட்டு பிரதேச தொழில் அலுவலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு இருந்தாலே 31 ஆம் திகதி இறுதிக்கட்டக் கொடுப்பனவு வழங்கப்படுமென அவர் தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பாக முதலாம் கட்ட கொடுப்பனவுக்குரிய புனரமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்து தொழில் அலுவலரிடம் உறுதிப்படுத்துமாறு தெரிவித்துள்ளனர். (ரி)

## வெண்புறா நிறுவனத்தால் வாழ்வாதார உதவித் திட்டம்

யாழ்ப்பாணம் —

பல்வேறுபட்ட அனர்த்தங்களின்போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனமானது வேறு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று மிதிவெடி அபாயக் கல்வித்திட்டம், வாழ்வாதாரத் திட்டம், வாழ்க்கைத்திறன் அபிவிருத்திக் கல்வித் திட்டம் எனப் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை பிரதேசத்தில் தற்போது மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன் 90 பயனாளிகளுக்கு சிற்றுண்டி உற்பத்தி, கருவாடு உற்பத்தி, சிறுவியாபாரம், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களுக்கு இருபதாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆறு பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், மீனவக் குடும்பங்களில் தெரிவுசெய்யப்பட்ட 17 பயனாளிகளுக்கு கட்டுமரங்களும், 13 பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், யுனிசெப் நிறுவன உதவியுடன் யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மிதிவெடி அபாயக் கல்வித்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், இதுவரை வீடு வீடாகச் சென்று ஏழாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மக்களுக்கு மிதிவெடி அபாயக்கல்வியூட்டப்பட்டுள்ளதுடன், பாடசாலைகள் ரீதியாக 1660 பாடவேளைகள் பெறப்பட்டு மிதிவெடி அபாயக் கல்வியூட்டப்பட்டு வருகிறது.

அத்துடன், யுனிசெப் உதவியுடன் பயிற்றுவிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் கிராமங்களில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு எயிட்ஸ், மது ஒழிப்பு போன்ற விழிப்புணர்வுகளும் தொடர்பாடல் திறன், வாழ்க்கைத் திறன் கல்வியும் தற்போது கிராமங்களில் வழங்கி வருவதாக இந்த நிறுவனத்தினர் தெரிவித்தனர். (90)

## வர்த்தக நோக்குடைய உற்பத்தியே குடாநாட்டில் இப்போது அதிகம்

### யாழ் .மேலதிக அரச அதிபர்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்தில் தற்போது உள்ளூர் தேவைகளை நோக்கமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளிலும் பார்க்க வர்த்தக தேவையை நோக்கமாகக் கொண்டு செய்யப்படுகின்ற உற்பத்திகள் அதிகம் என யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அலவலகத்தில் கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்ற பால் பதனிடல் உற்பத்தி நிலைய திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

பால் உற்பத்தி நிலையங்கள் மக்களுக்குத் தமது சேவையை வழங்குவதன் மூலம் போஷாக்குக் குறைபாடு என்ற ஒரு விடயம்' மக்களிடையே இருக்காது.

உள்ளூரில் பால் பதனிடல் உற்பத்தி நிறுவனம் இருப்பதன் மூலம் பால் உற்பத்தியாளர்களின் தொகையை அதிகரித்துக் கொள்ள முடியும். இதனால் வருமானம் அதிகரிப்பதுடன், போஷாக்கு நிறைந்த உணவும் கிடைக்கிறது.

இந்த நிறுவனங்கள் பணத்தையும், சுயநலத்தையும் நோக்காகக் கொண்டு இயங்குவதைத் தவிர்த்து, மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியவகையில் செயற்பட வேண்டும்.

பால் பதனிடல் நிலையம் தனது தொழிற்பாட்டை மேலும் விருத்தி செய்வதன் மூலம் பலருக்குத் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## மட்டுவில் வடக்கு, சரசாலை பகுதிகளில் மின்மானிகள் பொருத்தாது கட்டணம் அறவீடு

மட்டுவில் —

மட்டுவில் வடக்கு சரசாலைப் பகுதிகளுக்குக் கடந்த 17ஆம் திகதி முதல் மின்விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பகுதிக்கான மின் விநியோகப் பணிகள் சுமார் 20 மாதங்களின் பின்னர் தற்போது நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடி, சரசாலை வடக்கு ஆகிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மாற்றிகள் மூலமே மின் விநியோகம் இடம்பெறுகிறது.

இதேவேளை இந்த இரு மின்மாற்றிகளின் மூலம் மின்சாரம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்மானிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால், இதற்கு முன்னர் கடந்த வருடம்மின் விநியோம் வழங்கப்பட்ட கல்வயல், மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் பகுதி மக்களுக்கு இன்னமும் மின்மானிகள் பொருத்தப்படாமல் எழுந்தமானத்துக்குக் கட்டணம் அறவிடப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே மின்வழங்கப்பட்டு பல மாதங்களாக எழுந்தமானமாக அதிகரித்த கட்டணத்தைத் தாம் செலுத்திக் கொண்டிருக்கும் போது தங்களுக்கு மின்மானிகள் பொருத்தாமல், புதிதாக வழங்கப் பட்டவர்களுக்கு மின்மானிகள் பொருத்திய மின்சார சபையினரின் பொறுப்பற்ற செயலால் இந்தப் பகுதி மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.

தமக்கு மின்மானிகளைப் பொருத்தி அதிகரித்த கட்டணப் பளுவிலிருந்து தம்மை விடுவிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (24)

## சூரிய மின்கலம் பொருத்துவதில் கிராம வேறுபாடு, மக்கள் விசனம்!

ஊர்காவற்துறை —

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் நிதியத்தின் உதவியுடனான பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கலத்தில் இயங்கும் தெரு விளக்குகள் பொருத்து வதில் கிராம ரீதியாக வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தெருவிளக்குகள் 24 மணிநேர மின்சார வசதியுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள அதேவேளை, மின்சார வசதியற்ற நாரந்தனை தெற்கு, நாரந்தனை மத்தி, புளியங்கூடல் ஆகிய பகுதிகளுக்கு பொருத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (44)

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு புதிய நிர்வாகம்


யாழ்ப்பாணம் —

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது கடந்த 9 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள இணையத்தலைமையகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் -

தலைவராக சர்வோதய அமைப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம், உப தலைவராக ரி.தேவானந்த், செயலாளராக ஸ்ரீசக்திவேல், பொருளாளராக பொன்மலர் இராஜேஸ்வரன், உபசெயலாளராக சரோஜா சிவச்சந்திரன், கணக்காய்வாளராக சி.கமலநாதன், நிர்வாக உறுப்பினர்களாக பொ.விக்னேஸ்ரன், மு.கதிர்காமத்தம்பி ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

மேற்படி புதிய நிர்வாகத் தெரிவுக்கான கூட்டத்தில் அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

## தவக்கால நற்சிந்தனை



இன்று நாம் நம்மிடையே காண்பது என்ன? ஏதாவது ஒன்றைப் பெற வேண்டும் என்றால் எதையாவது கொடுக்க வேண்டியிருக்கிறது. அது பணமாக இருக்கலாம், பொருளாக இருக்கலாம், உழைப் பாகவும் இருக்கலாம். இதேவகையில் கடவுள் மனிதனைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொள்ளும்படியாகத் தம் ஒரே மகனாகிய யேசுவைப் பலியாக, விலையாகக் கொடுத்தார். ஆனால் கேவலம் காசு பணம் சுகபோக வாழ்விற்காகப் பலர் தங்கள் பிள்ளைகளையே பலியாக விலையாக ஈடாகக் கொடுப்பதை இன்று காண்கின்றோம். ஆனால் கடவுளோ தம் மகன் யேசுவைப் பாவிகளாகிய நம் அக்கிரமங்களுக்கு ஈடாக இரத்தப் பலியாகக் கொடுத்துள்ளார். அவரது இரத்தம் சிந்துதலின்றி பாவமன்னிப்பு இல்லையென்று மறைநூல் கூறுகிறது. எதனைப் பெறுவதற்காக இதனைச் செய்தார் என்றால் - நாம் தூயவர்களாகவும், மாசற்றவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதற்காகவே. நாம் ஒப்புரவாக வேண்டும், அவருடைய பிள்ளைகளாக வாழ வேண்டும் என்பதற்காகவேயாகும். ஆனால், அவரது பிள்ளைகளாகிய நாம் என்ன செய்கிறோம்? நாம் அவரது சிந்தப்பட்ட இரத்தத்தின் காரணத்தை நோக்கத்தை உணர்ந்து சீவிக்கின்றோமா? இல்லவேயில்லை. எனவே நாம் சிந்திப்போம்.

புனிதமாக வாழ இன்றே முயல்வோம்.

மோ. தார்சீசியஸ்.

## கிராமங்கள் தோறும் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ். சமுர்த்தி மகாசங்கத்தினரால் அதன் கீழுள்ள கிராமங்கள் தோறும் கிராமிய எழுச்சித் திட்ட வேலைகள் சமுர்த்தி அலுவலகங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். சமுர்த்தி மகா சங்கத்தின் இரு பிரிவுகளான யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி அலுவலக பிரிவு, யாழ். நகர் மேற்கு சமுர்த்தி அலுவலர் பிரிவுகளிலேயே இவ்வாறு கிராமிய எழுச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் சமுர்த்தி சிறுகுழுக்களால், சங்கங்களின் இடையே முன்னேற்ற கூட்டங்களை நடத்தல், மக்களின் வாழ் வாதாரத்தை உயர்த்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை கொட்டடி, குருநகர், ஈச்சமோட்டை, சோனகதெரு போன்ற இடங்களில் கிராமிய எழுச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இவ்வாறான வேலைகள் முன்னெடுக்கப்படுமெனவும் சமுர்த்தி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து



பெயர் : இ.மிதுனன்
முகவரி : கரணவாய்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ..........
முகவரி ..........
பிறந்த ஆண்டு: ..........

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்

# வர்த்தகத்துறையில் இலாபம் ஈட்டுவோர் சமூகத்திற்கு பங்களிப்பு செய்யவேண்டும்

## வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் தெரிவிப்பு

முல்லைத்தீவு—

தாயகப் பகுதிகளில் வியாபாரம் செய்து அதிக இலாபத்தைச் சம்பாதிக்கின்ற நிறுவனங்கள் அந்த இலாபத்தின் சிறு பகுதியை மக்களினதும், பிரதேசங்களினதும் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும் என நிதித்துறை வணிகர் ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - குமுழமுனை ஆறுமுகத்தான் குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

எமது கட்டுப்பாட்டுப் பகுதி பின்தங்கியது என்பதால் அபிவிருத்தியடைய முடியாத நிலையில் பல இடங்கள் உள்ளன. எனவே அவற்றை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கருதி இவ்வாறான வேலைகளைச் செய்து வருகிறோம். எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பின்தங்கிய நிலையிலுள்ள இடங்களை மேம்படுத்துவதற்கு எங்கள் பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பாரிய நிறுவனங்களையும் நாடியுள்ளோம்.

இதன் ஆரம்ப கட்டமாகப் பின்தங்கிய நிலையிலுள்ள குமுழமுனை ஆறுமுகத்தான் குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கட்டடம் அமைப்பதற்கு கொக்கோகோலா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அடிக்கல் நாட்டியுள்ளோம்.

இப்படியாக மலசலகூடம் இல்லாத நிலையில் பெருமளவு பாடசாலைகள் உள்ளன. சிறிய கட்டடத்துக்குள் பெருந்தொகையான மாணவர்கள் நெரிசலாக இருந்து கல்வி கற்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும். அதற்காகவே நாம் இப்படியான நிறுவனங்களை நாடி அவற்றின் மூலம் வேலைத்திட்டங்களை நகர்த்தி வருகிறோம்.

அரசாங்கம் இந்த நிலையை மாற்றமடையச் செய்யும் என நாம் நம்பியிருக்க முடியாது.

அது இப்போதைக்கு நடைபெறும் காரியமும் அல்ல.

எனவே, எமது நாட்டின் எதிர்கால வளங்களான சிறார்களின் கல்வி வசதியைக் கருத்தில் கொண்டு, அடிப்படை வசதிகளை வாணிப நிறுவனங்களின் ஊடாக மேற்கொண்டு வருகிறோம்.

எமது பிரதேசத்தின் நிலையைக் கருத்தில் கொண்டு இத்தகைய பணியை மேற்கொள்ளும் விற்பனை நிறுவனங்களுக்கான சந்தை வாய்ப்பை அதிகரிக்க நாம் முன்வந்துள்ளோம். எமது இந்தத் திட்டம் ஊடாக நெஸ்ரல் கம்பனி முல்லைத்தீவில் ஒரு கட்டட வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. சீ.எச்.ஐ. நிறுவனம், பாடசாலைக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு முன் வந்துள்ளது.

பெரும் வியாபாரங்களில் ஈடுபட்டு அதிக இலாபத்தை ஈட்டும் நிறுவனங்கள் தமது இலாபத்தின் ஒரு சிறு பகுதியைப் பொதுமக்களின் தேவைக்காகவும், அபிவிருத்திக்காகவும் பயன்படுத்த வேண்டும். மாணவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை இவர்கள் ஊடாக மேற்கொள்வதே வணிகர் ஒன்றியத்தின் நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு குமுழமுனை ஆறுமுகத்தான் குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு கொக்கோகோலா நிறுவனம் 3.87 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## குழந்தையின் இருதய சிகிச்சைக்கு புனர்வாழ்வுக்கழகம் நிதியுதவி

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு சிலாவத்தையைச் சேர்ந்த சாருகா எனும் எட்டு மாதக் குழந்தைக்கு கொழும்பு சிறீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிதியுதவி வழங்கியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் விசேட மருத்துவ உதவித்திட்டத்தின் கீழ் 45 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த சோ. துஷ்யந்தி, சாருகாவின் தந்தையான தமிழ்ச்செல்வனிடம் இந்தத் தொகையை வழங்கினார்.

இராணுவ நடவடிக்கைகளாலும், சுனாமியால் பாதிக்கப்பட்டு பெரும் பொருளாதார இடர்களை எதிர்நோக்கியிருந்த தனக்கு - தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இந்த உதவி பேருதவியாக அமைந்தது என்றும் இதனைத் தனது வாழ்வில் என்றுமே மறக்க முடியாதது என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

# சிறைச்சாலை அமைப்பதை மகிழ்ச்சியாக எண்ணமுடியாது!

## வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன்



வவுனியா—

சிறைச்சாலை கட்டுவதை மகிழ்ச்சியானதென எண்ண முடியாது என வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் சிறைச்சாலை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

பாடசாலைகள், ஆலயங்கள் கட்டுவது போல பொலிஸ் நிலையம், இராணுவ முகாம், சிறைச்சாலை என்பன கட்டுவதை மகிழ்வாக எண்ண முடியாது.

வெலிக்கடை சிறைச்சாலையில் 53 சிறைக்கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். பிந்துனுவெவவில் 25 சிறைக் கைதிகள் படுகொலை செய்யப்பட்டது போன்றவை நினைவுக்கு வரும்போது சிறைக்கூடம் கட்டுவதை மகிழ்ச்சியானதென எண்ண முடியவில்லை. சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளின் தனி மனித சுதந்திரம் பறிக்கப்படுகிறது என அவர் தெரிவித்தார். இந்தநிகழ்வுநேற்றுமுன்தினம் காலை10 மணியளவில்நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணிகள் அனைவரும் இடைநடுவில் வெளியேறினர். தமிழர் பிரதேசத்தில் சிங்களத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் சிங்களத்தில் வரவேற்புரை, பிரித்தோதலில் முன்னுரிமை போன்றவைகளை அவதானித்த சட்டத்தரணிகள் இந்த நிகழ்விலிருந்து இடைநடுவில் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சண்முகம், வவுனியா நீதிவான் இளஞ்செழியன், இராணுவ அதிகாரிகள், சட்டவாளர்கள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் மற்றும் பொலிஸார் எனப் பலர் கலந்து கொண்டனர். (03)

# தட்சணாமருதமடு பிரதேசத்தில் ஊர் நாடி பணி செய்யும் சேவை

மன்னார்—

மன்னார் - தட்சணாமருதமடு பிரதேசத்தில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையினரால் 'வளமுடன் நாம் பெற ஊர் நாடி பணி செய்யும் சேவை' நேற்று முன்தினம் நடைபெற்றது.

மடு கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை தமிழீழ கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் ரமேஸ் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தளபதி லக்ஸ்மன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அன்னைபூபதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை மடுவலயக் கல்விப் பணிப்பாளர் மா. தெய்வேந்திரன், மடுவலயப் பிரதேச செயலர் ரமேஸ்குமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மலர் மாலையை மன்னார் மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர், ஜான் அணிவித்தார்.

இந்தச் சேவையின் விளக்கவுரையை தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் நிகழ்த்தினார்.

இந்தச் சேவையில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப்பதிவுகள், வாகனப்பதிவுகள், தேசிய அடையாள அட்டை, கூட்டுறவு அட்டை, சுகாதாரம் மற்றும் கல்வி உட்பட மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கருத்தில் கொண்டே பல சேவைகள் இடம்பெற்றன.

இந்தச் சேவையில் பாலம்பிட்டி, தட்சணாமருதமடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

இந்தச் சேவை நேற்றும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அழகியல் கலாமன்றத்தின் மனிதநேயம் மலர நாடகம்

கொழும்பு—

உலக நாடக தினத்தை முன்னிட்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள தேசிய தமிழ் நாடக விழா கடந்த 17 ஆம்திகதி தொடக்கம் ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த அரங்கில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தேசிய தமிழ் நாடக விழாவின் இறுதிச் சுற்றுக்கு யாழ். குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தினரின் பண்டார வன்னியன், மலையக கலைப் பேரவை வழங்கும் வேண்டாம் இந்த மானுடப்பிறவி, மக்கள் கலை வழங்கும் சரண்தாஸ், கொழும்பு தேவாலயா வழங்கும் சித்தப்பா, பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் வெந்து தணிந்தது மற்றும் கிளிநொச்சி அழகியல் கலாமன்றம் 'வழங்கும் மனிதநேயம் மலர ஆகிய நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுமார் 25 வருடங்களின் பின்னர் கொழும்பில் நடைபெறும் தேசிய நாடகப் போட்டியொன்றில் வடபகுதியைச் சேர்ந்த நாடகங்கள் இடம் பெறுவது இதுவே முதற் தடவையாகும்.

ஆறாம் நாள் நிகழ்வாக இன்று இடம்பெறும் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தினரின் மனிதநேயம் மலர என்ற நாடகம் இயற்கையாலும், யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட தமிழர்களின் துயரங்களையும் இவ்வாறு பாதிக்கப்பட்ட அவர்கள் புத்துயிர் பெற்று எழுவதையும் சித்திரிப்பதாக அமைந்துள்ளது. இந்த நாடகத்தை கே.விஜயசேகரன் எழுதி நெறிப்படுத்தியுள்ளார்.

# வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேரூந்தில் பாரிய கொள்ளை!

கொழும்பு—

கொழும்பிலிருந்து - வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேரூந்து பிரயாணிகளிடமிருந்து பணம், நகைகள், மணிக்கூடுகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் கொள்ளையடிக்கப்பட்டதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

நொச்சியாகமவுக்கு அண்மையாக கலயாய சந்திக்கும், அனுராதபுரத்துக்கும் அண்மையாக உலுக்குளக்குளம் சந்திக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பேரூந்தின் நடத்துனரின் தலையில் கைத்துப்பாக்கியால் தாக்கிவிட்டு அவரிடமிருந்து 22 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நடத்துனரின் தகவலின்படி கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட ஐவர் - குறித்த பேரூந்தில் கொழும்பிலிருந்து பயணத்தை மேற்கொண்டனர்.

நொச்சியாகமவைக் கடந்து கலயாய சந்தியைப் பேரூந்து அண்மித்த வேளை - ஆசனங்களிலிருந்து எழுந்த இவர் சாரதிக்கு அருகில் சென்று அவரது தலையில் கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டி மெதுவாகப் பேரூந்தைச் செலுத்துமாறு எச்சரித்தனர்.

இதன்பின் கொள்ளையர்களில் ஒருவர் பேரூந்தின் மிதிபலகையில் நின்று வீதியைக் கண்காணிக்க மற்றைய மூவரும் கைகளில் துப்பாக்கியை ஏந்தியவாறு பயணிகளிடம் சென்று அவர்களை மிரட்டி பணம், நகைகள், மணிக்கூடுகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்ளையடித்தனர்.

இந்தப் பேரூந்தில் வடபகுதியைச் சேர்ந்தவர்களே பெருமளவில் பயணத்தை மேற்கொண்ட போதிலும், அவர்களில் சிலரைத் தவிர ஏனையோர் முறைப்பாடு எதுவும் செய்யாமல் சென்று விட்டதாக இந்தச் சம்பவத்தை விசாரணை செய்துவரும் அனுராதபுரம் குற்றவியல் விசாரணைப் பகுதிப் பொறுப்பதிகாரியான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆர். பி.குலுகம்மன தெரிவித்தார். (தே)

# மணல் அகழ்வுக்கான இடங்கள் நிர்வாக சேவையால் அறிவிப்பு

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் மணல் மையங்கள் அமைந்துள்ள இடங்களில் மணல் அகழ்வுக்கு அனுமதிக்கப்பட்ட ஆறுகளின் விபரங்கள் தமிழீழ நிர்வாக சேவையால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மாந்தை மேற்கு பிரதேசசபையின் கீழ் இலுப்பைக் கடவைச் சந்திக்கருகாமை, பாலம்பிட்டிச் சந்திக்கருகாமை போன்ற இடங்களிலும் பறங்கியாறு, பூமலர்ந்தான் ஆறு ஆகிய ஆறுகளிலும் மணல் அகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கியும் ஆரம்ப வேலைகள் நடைபெறவில்லை

கட்டைக்காடு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நிரந்தர கட்டடங்கள் அமைப்பதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 41 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு தனியார் ஒப்பந்தகாரரிடம் இந்த நிறுவனம் கடந்த ஜனவரி மாதத்தில் ஒப்பந்தம் செய்துள்ளது.

பாடசாலைக்கு கட்டடங்களைப் பார்வையிட அண்மையில் வந்த ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன உயர் அதிகாரிகள் குழு - இதுவரை பாடசாலை நிரந்தரக் கட்டடங்களை அமைப்பதற்குரிய ஆரம்ப வேலைகள் கூட நடைபெறாததைக் கண்டு அதிர்ச்சியும், கவலையும் அடைந்தனர்.

தகரத்தாலான தற்காலிக வகுப்பறைகளைப் பார்வையிட்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருடன் பாடசாலைகளில் உள்ள குறைகளைக் கேட்டறிந்ததுடன், ஒப்பந்தகாரருடன் தொடர்பு கொண்டு பாடசாலைக் கட்டடங்கள் அமைக்க உடன் நடவடிக்கை எடுப்பதாகக் கூறிச் சென்றுள்ளனர். (21)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
பகைநட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன்
தகைமைக் கண்தங்கிற்று உலகு. - திருக்குறள்

## நமது நோக்கு

# மீண்டுமொரு சறுக்கல்!

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் 35 பேர் இன்று மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். குடாநாட்டில் அரசியல் பணிக்காக வரவிருந்த பயணம் அரச தரப்பின் நிபந்தனைகளால் கடைசி நேரத்தில் இரத்தாகியுள்ளது.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் - அரசியல்துறைப் போராளிகள், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் திரும்பிச்செல்ல நேரிட்டது.

அதற்கு முழுமையான காரணமாக அமைந்தது - வடக்கு-கிழக்கில் போராளிகள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் இடம்பெற்றதேயாகும். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதுகாப்பற்றதொரு சூழல் ஏற்பட்டபோது - புலிகளின் தலைமைப்பீடம், தமது போராளிகளை மீள அழைத்துக்கொண்டது.

இந்த மீள்அழைப்பின் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் குற்றச்செயல்கள் அதிகரிப்பு முதல் ஏராளமான சம்பவங்கள் கடந்த ஆறுமாத காலத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

புலிகள் அரசியல்பணி ஆற்றியபோது - குடாநாட்டில் குற்றச் செயல்கள் குறைந்திருந்ததாக கணிப்பீடுகள் தெரிவித்திருந்தன. ஆனால், புலிகள் இங்கிருந்து சென்றவுடன் கொலைகள், களவுகள் என்று மிக மோசமானதொரு நிலைக்கு குடாநாடு தள்ளப்பட்டது உண்மை.

இந்தக் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அக்கறையின்றியிருந்ததாகவும், நிறையவே குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இத்தகைய நிலையில் புலிகள் பளையில் ஓர் அரசியல் செயலகத்தை நிறுவியதுடன், அங்கு யாழ்.குடாநாட்டுக்கான குற்றச்செயல்கள் தொடர்பான விடயங்களைக் கவனிக்கும் காவல்நிலையம் ஒன்றையும் திறக்க நேரிட்டது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் திரும்புவதானது குற்றச்செயல்களையும், ஒழுக்கீனங்களையும் கட்டுப்படுத்த வாய்ப்பாக அமையும் என்ற பொதுவான எதிர்பார்ப்பு இருந்தது.

அத்துடன், அரசியல்ரீதியாக இந்த மீள்வருகை புதிய நம்பிக்கைகயை மக்களிடத்தில் ஊட்டுவதாகவும் இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் இந்தப் பயணம் இரத்துச் செய்யப்படும் நிலையை அரசதரப்பு ஏற்படுத்தியிருப்பது இந்த எதிர்பார்ப்புக்கள் மீது மண் அள்ளிப்போட்டுள்ளது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியில் போராளிகள் ஈடுபடுவது போர்நிறுத்த உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு அம்சமாகும். அந்த உடன்பாட்டை நிறைவேற்றும் வகையில் நடந்துகொள்ள வேண்டியதும் அரச தரப்புக்கு இருக்கும் பொறுப்பேயாகும்.

ஆனால், போர்நிறுத்த உடன்பாட்டின்படியும், ஜெனிவா உடன்பாட்டுக்கு அமையவும் அரசாங்கம் நடந்துகொள்ளாமல் புதிய புதிய நிபந்தனைகளை விதிக்க முற்பட்டுள்ளது. இதன்மூலம் இர்ாணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான புலிகளின் பயணத்தை தடுத்துவிடுவதற்கே அரசாங்கம் எத்தனித்துள்ளது.

தமிழீழ தேசியக்கொடியை ஏற்றக்கூடாதென்றும், மக்களையும் மாணவர்களையும் எழுச்சியூட்டும் நிகழ்வுகளை நடத்தக்கூடாதென்றும் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளானது முற்றிலும் உள்நோக்கம் கொண்டதேயன்றி வேறில்லை.

இத்தகைய நிபந்தனைகளை ஏற்று புலிகள் அரசியல் பணிக்காக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரமாட்டார்கள் என்பதை அறிந்தே கபடத்தனமான நிபந்தனைகளை அரசு போட முற்பட்டுள்ளது.

மக்களுக்கும் புலிகளுக்கும் இடையிலான உறவையும் தொடர்பையும் இதன்மூலம் வெட்டிவிட முடியுமென அரசாங்கம் பகல்கனவு காண்கிறது. ஆனால், நிச்சயம் அப்படி நிகழப் போவதில்லை.


அதேவேளை-போராளிகளின் அரசியல் பணிக்கு அரசாங்கத்தால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது இன்னொரு முறுகலுக்குக் காரணமாகி விடக்கூடும்.

ஜெனிவா பேச்சுக்களின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டை அரசு முறையாக அமுல்படுத்தினால் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டுவிட முடியும். ஜெனிவா பேச்சுக்களின் பின்னர்கூட அனல்பறக்கும் அறிக்கைகள் வெளியாகின்றன.

ஆனாலும் அரசியல் போராளிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுப்ப புலிகளின் தலைமை நடவடிக்கை எடுத்திருந்தது. இத்தகைய சந்தர்ப்பத்தை அரசதரப்பு வாய்ப்பாகப் பயன்படுத்தி புதிய நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துவதற்கு முயற்சித்திருக்க வேண்டும்.

அதில் தவறிழைத்திருக்கும் அரசு, இனிமேலாவது இந்த விடயத்தில் சாதகமான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதுதான் சமாதான முயற்சிகளை வலுப்படுத்துவதாக அமையும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com




# தலைவலி, காய்ச்சல் பீடித்த டாக்டருக்கு
## பனடோல் போட நாம் சொல்லலாமா?

### ஊர்சுற்றியார் எழுதுவது

"யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பற்றி நீர் நேற்று எழுதியிருந்தீர். பெரும்பாலும் நீர் எழுதியவை மெத்தச்சரி என்றே சொல்லலாம். ஆனாலும், பெரிய வைத்தியர்கள் அவர்களின் கீழுள்ள வைத்தியர்கள், அதிகாரிகள் எல்லோரும் நோயாளிகளான பொதுமக்களுடன் அன்பாகவும், பண்பாகவும், பொறுமையாகவும் நடந்து கொள்கிறார்கள். நோயாளிகளின் குறைகளைக் கேட்டு அவற்றை நீக்குவதற்குத் தமது கடமைக்கு மேலாகவும் சென்று உதவுகிறார்கள். சிலர் இதற்கு எதிர்மாறாகவும் நடந்து கொள்கிறார்களே".

நேற்றுக்காலையில் "நமது ஈழநாடு"வில் ஊர்சுற்றியார் எழுதியதைப் படித்தபின் அலுவலகம் வந்த ஓரன்பர் இப்படிச் சொன்னார்.

என்ன விஷயம் என்று கேட்டேன். அவர் இருதய நோயாளியாம். முதல்நாள் இரவு அவருக்கு நெஞ்சில் சிறிது தாக்கம் ஏற்பட்டதாகத் தூக்கத்தில் உணர்ந்தார். மறுநாள் நெஞ்சில் இலேசான வலியும் இருந்தது. திங்கட்கிழமையாதலால் வைத்தியசாலையில் பழைய வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவில் நடக்கும் டாக்டர் பேரானந்தராசாவின் இருதய நோயாளர்களுக்கான கிளினிக்குக்கு இவர் போனார்.

அங்கு வழமையாக நோயாளர்களைப் பார்வையிடும் டாக்டர் இவரைப் பரிசோதனை செய்து ஈ.சி.ஜி எனப்படும் மார்புப் பகுதியைப் பதிவு செய்யும் இலத்திரனியல் சிகிச்சைக்கு அனுப்பினார். இந்தப் பகுதி வைத்தியசாலையின் மறுமுனையிலிருக்கிறது. நோயாளி அங்கு சென்று இந்த ஈ.சி.ஜி பதிவுக்குத் தாம் கொண்டு வந்த துண்டைக்காட்டினார். அதற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர் (டாக்டர்) தமக்குக் காய்ச்சல், தலைவலி என்றும் தம்மால் கடமையைச் செய்ய முடியாதென்றும் சொன்னார்.

தாம் ஈ.சி.ஜி பதிவு செய்ய வந்தவர்களைப் பின்னர் வருமாறு திருப்பி அனுப்புவதாகவும் அவர் சொன்னார். இந்த நோயாளியும் தனது சுகவீனத்தை எடுத்துச்சொல்லி என்ன செய்யலாம் என்று டாக்டரிடம் கேட்டார். என்னால் ஒன்றும் செய்ய இயலாது. நீங்கள் கம்ப்ளயின்ட் செய்வதென்றால் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்.

இதற்கு அந்த நோயாளி, "நான் கம்ப்ளயின்ட் செய்ய வரவில்லை ஈ.சி.ஜி எடுக்கவே வந்தேன்" என்று சொன்னார். பின்னர் தமது உடல் நிலையில் அக்கறையுடன் கவனம் செலுத்திய டாக்டரிடம் வந்து ஈ.சி.ஜி நிலைமையைச் சொல்லி பணிப்பாளரிடம் போய்க்கேட்கவா என்று கேட்டிருக்கிறார்.

பின்னர் அந்த டாக்டரே மேலிடத்துடன் தொடர்புகொண்ட பின் வேறொரு டாக்டர் பதிலுக்கு ஏற்பாடு செய்யப்படுவதாகத் தகவல் கிடைத்தது. மீண்டும் நோயாளி ஈ.சி.ஜி பிரிவுக்குச் சென்றபோது பிற்பகல் 2 மணிக்கு மேல் வருமாறு சொல்லப்பட்டது. பிற்பகல் 3 மணிக்குச் சென்றபோது வேறொரு டாக்டர் ஈ.சி.ஜி எடுத்து உதவினார். இதேசமயம் காலையில் காய்ச்சல், தலைவலியில் "அவஸ்தைப்பட்ட" டாக்டரும் "தலைநிமிர்ந்து" அங்கு உட்கார்ந்திருந்து ஊழியர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். பின்னர் அங்கிருந்து சென்றார்.

பாவம் அவரும் ஓர் இளைஞர். அவருக்கென்ன காய்ச்சலோ! என்ன தலைவலியோ! தலைவலி, காய்ச்சலுக்கு பனடோல் போட்டு சமாளியுங்கள் என்று டாக்டர்களுக்கு நாம் சொல்லலாமா? அந்த அன்பர் இதைச் சொல்லிமுடித்தார்.

இதை இங்கு சொல்லவேண்டி வந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. ஈ.சி.ஜி அவசரமாக எடுக்க வேண்டியிருந்ததால் வைத்தியசாலைக்கு எதிரில் இருக்கும் ஒரு தனியார் மருத்துவ நிலையத்துக்குச் சென்ற அவர் - அங்கு பணி யாற்றிய சீருடை தரித்த ஊழியரான ஒரு இளம் மங்கையிடம் ஈ.சி.ஜி எடுப்பது பற்றியும் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்.

அந்த மங்கை மேலும்கீழும் ஏறிஇறங்கி வந்து "எக்கோ காடியோ கிராம்தான் எடுக்கலாம், அதற்கு ஆயிரத்து எழுநூற்றி ஐம்பது ரூபாய் செலவாகும்" என்று சொன்னார். இதைக் கேட்ட பின் இதற்குமேலும் விசாரித்தால் இருதய நோய் பெரிதாகி விடும் என்று அஞ்சிப் பெரியாஸ்பத்திரிக்கே திரும்பிவிட்டாராம்.

இன்னொரு நல்ல செய்தி இந்த "எக்கோ காடியோ கிராம்" என்ற கருவி விரைவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நிறுவப்படவிருப்பதாக இருதய நோயாளர் பகுதியில் அன்பாகவும், பண்பாகவும் நோயாளர்களைக் கவனிக்கும் அந்த இளம் டாக்டர் தகவல் தந்தார். இருதய நோயாளர்களுக்கு இது நல்ல செய்தி!

இங்கு தனியார் மருத்துவமனைகளில் சலரோகக்காரர்கள் சாப்பிட்டு இரண்டுமணி நேரத்தின்பின் செய்யும் இரத்தப் பரிசோதனைக்கு(P.B.S) தொண்ணூறு நூறு ரூபா எடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் இந்தப் பரிசோதனைக்கு நாற்பது ரூபாய் வேண்டுகிறார்கள்.

கேரளத்தில் திருவனந்தபுரத்தில் ஓரிடத்தில் இரத்தமும், சலமும் சோதிப்பதற்கு இருபது ரூபாய் மட்டுமே எடுக்கிறார்கள். அரைமணி, முக்கால்மணி நேரத்தில் முடிவும் தெரிவித்து அனுப்பி விடுகிறார்கள் என்று நான் அந்த நண்பருக்குச் சொன் னேன்.

இங்கு தனியார் மருத்துவ நிலையங்களுக்குச் செலவும் அதிகம்தான், அதற்குக் கட்டணங்களால்தானே ஈடுகட்டமுடியும் என்றும் நண்பர் சொன்னார்.

# ஓட்டோ கட்டணங்கள் ஓடாமல் நிற்குமா?

ஆஸ்பத்திரியிலிருந்து அல்லது பஸ்நிலையத்திலிருந்து நமது ஈழநாடு அலுவலகம் உள்ள நாவலர் வீதி, மணிக்கூட்டு வீதிச் சந்திக்குச் செல்வதற்கு ஆட்டோக்காரர் நூறு ரூபா கேட்கிறார்கள். எண்பது ரூபாய்க்குக் குறைவாக எவரும் வரமறுக்கிறார்கள் என்று இடையில் நுழைந்த பரதேசியார் ஓட்டோக் கட்டணம் பற்றிக் கதையைத் திருப்பினார்.

இங்கு யாழ்ப்பாணத்தில் ஓட்டோவில் ஏறி இறங்கினால் ஐம்பது ரூபா. அதற்குக் குறைவாக எந்த ஆட்டோவும் கட்டணம் வாங்குவதில்லை என்று பரதேசியார் சொன்னார்.

திருவனந்தபுரம் பஸ் நிலையத்திலிருந்து- விமான நிலையத்துக்குச் செல்வதற்கு ஐம்பது ரூபாய் கட்டணம் வாங்குகிறார்கள். இது யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலிருந்து- பலாலி விமான நிலையத்துக்குச் செல்லும் தூரத்தையும்விட அதிகமாகவே இருக்கக்கூடும்.

இதுமட்டுமல்ல. உள்ளூரில் சில இடங்களுக்குச் செல்லவதற்குப் பத்து ரூபாகூட வாங்குகிறார்கள். இது இங்கு எழுபது ரூபா கட்டண்ம் வசூலிக்கும் தூரமாக இருக்கும். திருவனந்தபுரத்தில் விமான நிலையத்திலுள்ள ஓட்டோக்காரர் சிலரிடம் ஏமாளிகள் அகப்பட்டால் மொட்டையடிக்காமல் விட்டுவிடமாட்டார்கள் என் றும் சொன்னேன். மட்டக்களப்பு நகரில் ஓட்டோ ஓட்டுநர் சங்கம் வைத்திருக்கிறார்கள். இந்தச் சங்கம் நகரில் குறிப்பிட்ட இடங்களுக்கு எவ் வளவு கட்டணம் வாங்க வேண்டுமென்பதை நிர்ணயித்துத் துண்டுப்பிரசுரமாக அச்சடித்து ஓட்டோக்களிலேயே பயணிகள் பார்வையிடக்கூடியவாறு ஒட்டிவைத்திருக்கிறார்கள். அந்தக் கட்டணம் நியாயமானதாகவே இருக்கிறது என்று பரதேசியார் சொன்னார்.

தமிழ் நாட்டிலும் சில இடங்களில் ஆட்டோகாரர்கள் நியாயமான கட்டணம் வசூலிக்கிறார்கள். திருவனந்தபுரத்திலிருந்து வந்து திருச்செந்தூர் வரவேற்பு வளைவு சந்தியிலிற[illegible]கி வீரராகவபுரம், தெற்குப்புதுத்தெரு, கிருஷ்ணாதியேட்டருக்கு ஐம[illegible]து மீற்றர் முன்னாடியே இறங்கியதும் ஆட்டோக்காரர் இருபது ரூபாதான் கேட்டார். எனக்கு ஆச்சரியம் இங்கேயென்றால் அறுபது ரூபாவுக்குக் குறைவாக வாங்கியிருக்க மாட்டார்கள் என்று சொன் னேன்.

எதற்கும் யாழ்ப்பாணத்தில் ஓட்டோ ஓட்டுநர் சங்கம் கட்டணம் நிர்ணயித்து மட்டக்களப்பைப்போல் நியாயமாக நடந்து கொண்டால் பயணிகள் குறைசொல்வதற்கு இடமிருக்காது என்று பரதேசியார் சொல்லிக்கொண்டு புறப்பட்டார்.

தமிழ்நாட்டில் திருச்சி மற்றும் சில இடங்களில் ''ஷேர் ஆட்டோ'' என்று புதுவித ஆட்டோ ஓடுகின்றன. இதில் எட்டுப்பேர் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

பத்துப் பதினைந்து பேரும் பயணம் செய்கிறார்கள். வேகமாக ஓடினால் புரண்டு விபத்துக்குள்ளாகிவிடும். இப்படி விபத்துக்களில் சிலர் காயமடைந்த சம்பவங்களுமுண்டு! என்று சொன்னேன். ஐயோ அந்த ஷேர் ஓட்டோ இங்கு வேண்டவே வேண்டாம் என்றார் பரதேசியார்.

"நோர்வேயை வெளியேற்றுவது பொய்" என்ற தலைப்பில் 16.03.06 லங்காதீப நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

தமிழில் வல்வையூரான்

# இடி முழங்கி மழை பெய்தாலும் நோர்வேயை வெளியேற்ற முடியாது!

முழங்குகின்ற அளவுக்கு மழை பெய்வதில்லை என்ற கதை ஒன்றுள்ளது. உண்மையில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கடந்த சில நாட்களில், இந்த முழக்கம் பற்றியும், மழை பற்றியும் புதுமையான கதையொன்றைக் கூறினார்.



நாங்கள் முழங்குவது மட்டுமல்ல, பெய்கின்ற வேளையில் பெய்வதாகவும் கூறியிருந்தார்.

அவ்வாறு கூறிய ஜே.வி.பி தலைவர், ஏப்ரல் மாதத்தில் சமாதானப் பேச்சு நடைபெறுவதற்கு முன், நோர்வேயை வெளியேற்றவில்லையெனில், அரசாங்கத்துக்கான ஆதரவை ஜே.வி.பி விலக்கிக் கொள்ளுமென ஜனாதிபதிக்கு தெரிவித்திருந்தார். அதாவது நோர்வே குறித்து இவ்வளவு காலமும் முழங்கிய ஜே.வி.பி - தற்பொழுது முழங்குகின்ற அளவுக்கு மழை பெய்வதில்லை என்ற கதையைப் பொய்யாக்கி பெய்யப் போவதாக கூறியிருந்தார். இனி மகிந்த நனைவாரா, அப்பொழுது நோர்வேயை வெளியேற்றுவாரா? முழங்கும் போதே போகாத நோர்வே மழை பெய்யும் போது போகுமா? என தற்போது இது போன்ற கேள்விகள் அதிகம்.

உண்மையாகவே நோர்வேயை வெளியேற்ற முடியாதா? அடிப்படைப்



பிரச்சினை அது தான். எது சரி, உண்மையான கதை அதுதான். இன்று ஜனாதிபதி தனக்கும், தனது நாட்டுக்கும் தொடர்ந்தும் நோர்வேயின் அனுசரணைப் பணி தேவையில்லையென கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவருக்கு தெரிவித்தால், நோர்வே அதிலிருந்து விலகத்தான் வேண்டும். அப்படியானால் - ஏன் மகிந்தவிடம் கூறி ஜே.வி.பியால் அதனைச் செய்ய முடியாது. பிரச்சினை இந்த இடத்தில் தான் உள்ளது.

1988,1989 ஆம்ஆண்டு காலப்பகுதியில் இதே போன்று இந்த நாட்டு சமாதான முயற்சிகளிலிருந்து இந்தியாவை வெளியேற்ற வேண்டிய தேவை இருந்தது. அப்பொழுது அதிகாரத்திலிருந்த பிரேமதாஸ அரசாங்கத்துக்கு ஜே.வி.பி இதனை வாயால் கூறவில்லை. மாறாக ரி 56 ரக துப்பாக்கியால் கூறியது பிரேமதாஸவுக்கும், இந்தியாவை வெளியேற்ற வேண்டிய தேவை இருந்தது.

1988 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களுக்கு இரண்டு வாக்குறுதிகளை அவர் வழங்கினார். முதலாவது - இந்த நாட்டிலுள்ள இந்திய அமைதிப் படையை வெளியேற்றுவது. இரண்டாவது - இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை திருத்தி, அதனை நட்புறவு ஒப்பந்தமாக மாற்றுவது.

பிரேமதாஸ ஜனாதிபதியாகப் பதவியேற்றது தொடக்கம்இந்த இரண்டு வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் வரை, பிரேமதாஸவை ஆட்சி செய்ய ஜே.வி.பியினர் விடவில்லை. வேலை நிறுத்தங்களை நடத்தினர், உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டத்தைப் போட்டனர். அரச சொத்துக்களை நாசமாக்கினர். மிகப் பாரிய பயங்கரங்களை ஏற்படுத்தினர்.

பிரேமதாஸவுக்கு முதலில் தேவையாக இருந்தது இந்திய அமைதிப்படையை இந்த நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான பின்னணியைத் தயாரித்த, இலங்கை - இந்திய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு பின்னணியை உருவாக்கிய, இந்திய அமைதிப்படையை நாட்டில் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கும், அரசை செயற்படுத்துவதற்கும் பொறுமையின்றி - அப்போது இலங்கையில் இந்திய தூதுவராக இருந்த டிக்சிற்றை அமைதியடையச் செய்வதே.

பிரேமதாஸ அந்தப் பணியை செய்வதற்கே முதலில் தனது நடவடிக்கையை ஆரம்பித்தார். நெருப்புடன் விளையாட வேண்டாம். இந்தப் பணி மிகக் கடினம் என அவருக்கு வெளிநாட்டு தொடர்புகளுள்ள முக்கிய பிரமுகர்கள் தெரிவித்தனர். கருங்கல்லில் தலையை மோதிப் பார்க்க வேண்டாமென இராஜதந்திரிகள்ஆலோசனை வழங்கினார்கள்.

ஆனால் பிரேமதாஸ இவற்றைக் கேட்கவில்லை. எப்படியாவது இந்தப் பணியை பிரேமதாஸ செய்ய வேண்டியிருந்தது. அந்தப் பணியை பிரேமதாஸ செய்த விதத்தை டிக்சிற்றின் சொற்களில் கூறுவதானால் இப்படித்தான் -

பிரேமதாஸ வெற்றி பெற்று இரண்டு தினங்களின் பின்னர் அதாவது 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி விசேட சந்திப்புக்காக மத்திய கொழும்பு, புதுக்கடையிலுள்ள அவரது வீடான சுசரித்தவுக்கு என்னை அழைத்தார். புதிய ஜனாதிபதியுடன் நடைபெற்ற இந்த முதலாவது பேச்சுவார்த்தையிலேயே எதிர்காலம் சுவையற்றதென்பது தெரிந்தது. பிரேமதாஸ வெற்றி பெற்ற பின்னர் அழைப்புக் கிடைத்த முதலாவது தூதுவராக நான் அமைந்தேன். எவ்வாறாயினும் இந்திய தூதுவரை சந்தித்தார் என்பதனை மறைப்பது அவருக்குத் தேவையாக இருந்தது.

என்னை மாலை 6.30 மணிக்கு வருமாறு அழைப்புக் கிடைத்தது. 30 நிமிடம் வரை பார்த்துவிட்டு அவர் என்னைச் சந்திக்க வந்தார். நாங்கள் சுமார் அரை மணிநேரம் கலந்துரையாடினோம். ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் தொடர்புவைத்த விதம் போலவே, என்னுடைய ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக கூறினார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம், இந்திய அமைதிப்படை தொடர்பாக தான் கொண்டுள்ள சந்தேகம் குறித்து எனக்கு தெரியும் தானே எனக் கேட்ட அவர் - இயலுமானவரை விரைவில் இந்திய அமைதிப்படையை திருப்பி அனுப்புவதே தனது நோக்கம் எனவும் தெரிவித்தார். அதே போன்று விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்துவதற்கு ஆலோசித்து வருவதாகவும் என்னிடம் கூறினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை இலக்காக வைத்து இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட சில விடயங்களை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதுடன், ஒப்பந்தத்தில் வருகின்ற சிங்கள பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ள முடியாத சில விடயங்களை புதுப்பிப்பதற்கு அல்லது நீக்க கூடுமெனவும் தெரிவித்தார்.

ஜனவரி 14 ஆம் திகதி நான் கொழும்புக்கு வரும் போது பிரேமதாஸ தனது அமைச்சரவையில் பல மாற்றங்களை மேற்கொண்டிருந்தார். எனக்கு அவரை சந்திப்பதற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. மிகவும் முக்கியமான, அரசியல் ரீதியான விடயங்கள் தொடர்பானவற்றை வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவிடம் மாத்திரம் வைத்துக் கொள்ளவேண்டுமென ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாஸ எனக்குத் தெரிவித்தார்.

இதோ அவர் அப்படி, இப்படியாக செய்து டிக்சிற்றை அமைதியாக்கி இந்திய அமைதிப் படையை வெளியேற்றினார். இதனையடுத்து இலங்கை - இந்திய ஒப்பந்தம் செயலற்றுப் போனது. பிரேமதாஸ இவை அனைத்தையும் தனித்தே செய்தார்.

இவற்றைச் செய்வதற்கு அவருக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்தைய ஐரோப்பாவிலிருந்து எந்தவொரு நாடும் உதவவில்லை. இந்த நாடுகள் இந்தப் பிராந்தியத்திலுள்ள இந்தியாவின் மத்தியஸ் தத்துவத்தைக் கொண்டு இந்தப் பிரச்சினையை தீர்க்குமாறு கூறின.

இந்திய அமைதிப்படை செய்த குற்றங்கள், மற்றும் இலங்கை - இந்திய உடன்படிக்கையின் விளைவுகள் குறித்து சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்த பிரேமதாஸவின் அரசாங்கம் என்ன செய்தாலும், அவர்கள் இந்தியாவை ஆத்திரமூட்டாமல், இந்தியா கூறும் விதமாக பிரச்சினையைத் தீர்க்குமாறு கூறினார்கள்.

ஆனால், இவற்றுக்கெல்லாம் பிரேமதாஸ வளைந்து கொடுக்கவில்லை. அவர் ஜே.வி.பியின் துப்பாக்கிகளை அமைதியடையச் செய்வதாகவும், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவும் இந்திய அமைதிப்படையை வீட்டுக்கு அனுப்பி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை செயலற்றதாக்கினார்.

அவ்வாறெனில் மகிந்த ஊடாக - ஜே.வி.பிக்கு ஏன் இவற்றைச் செய்ய முடியாது? இன்று ஜே.வி.பியிடம் துப்பாக்கிகள் இல்லை. ஆனால், அவற்றைவிட பலமான வாக்குகள் உள்ளன. மகிந்த நாட்டை ஆட்சி செய்வது ஜே.வி.பியின் வாக்குகளால், ஜே.வி.பி விலகினால் மகிந்தவின் அரசாங்கம் நிலத்தில்.

அன்று பிரேமதாஸவுக்கு அச்சுறுத்தல் ஜே.வி.பியின் துப்பாக்கிகள் மாத்திரம். பிரேமதாஸ இந்திய அமைதிப்படையை வெளியேற்றாமல், இலங்கை -இந்திய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்திக் கொண்டு இந்திய உதவியுடன், ஜே.வி.பி யின் துப்பாக்கிகளை அமைதியடையச் செய்து, ஜே.வி.பியை அழிப்பதற்கு இயலுமாக இருந்தது. பிரேமதாஸ, ஜே.வி.பியை நம்பி வாழவில்லை. ஜே.வி.பி இற்கு துப்பாக்கியின் சத்தத்தை தவிர நாடாளுமன்றில் குரல் இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் தனக்கும், ஜே.வி.பிக்கும் தேவையானவற்றை, நாட்டுக்கு அளித்த வாக்குறுதிகளைச் செய்தார்.

ஆனால் மகிந்த இன்று ஜே.வி.பியின் வாக்குகளின்றி எதனையும் செய்ய முடியாதுள்ளார். அப்படிப்பட்ட ஜனாதிபதி ஒருவரின் மூலம், தனக்குத் தேவையானவற்றை ஜே.வி.பி செய்ய முடியாவிட்டால் அது ஆச்சரியமானது. அடுத்தது நோர்வேயை வெளியேற்ற வேண்டுமென்பது ஜே.வி.பியின் தேவை மட்டுமல்ல, ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி, ஜே.வி.பியுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தினூடாக நாட்டுக்கு வழங்கிய வாக்குறுதியுமாகும்.

நோர்வேயை வெளியேற்றுவதற்கு - எனக்கு மக்கள் அங்கீகாரம் கிடைத்துள்ளது. நோர்வேயை வெளியேற்றாமல் எனது அரசாங்கத்தைப் பாதுகாக்க முடியாது. நோர்வேக்குப் பதிலாக ஆசிய நாடொன்றை அனுசரணையாளராக நியமித்து, சமாதான முயற்சியை முன்னெடுப்பேன். இல்லையெனில் விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேசுவேன். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மகிந்தவுக்கு இவ்வாறு கூறி தீர்மானமெடுக்க எவருடைய அழுத்தமும் இருக்கவில்லை. அவர் அவ்வாறு கூறி நோர்வேயை வெளியேற்றத் தீர்மானித்தாரெனின் நாளை நோர்வே இலங்கைக்கு வந்து குண்டு போட முடியாது.

நோர்வேயை ஆதரிக்கின்ற அமெரிக்கா உட்பட்ட ஐரோப்பாவுக்கு, உலக வரைபடத்திலிருந்து இலங்கையை இல்லாதொழிக்க முடியாது. தன்னை வெளியேறச் சொன்னவுடன் சென்ற இந்தியாவுக்கு, நோர்வேயை வெளியேறச் சொன்னவுடன் இங்கு தொடர்ந்திருப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை. நோர்வே வெளியேறும் போது, அந்த இடத்தை நிரப்புவதற்கு பல நாடுகள் காத்திருக்கின்றன.

இவ்வாறு காத்திருக்கும் நாடுகளில் முதலாவது ஜப்பான். நோர்வேயை வெளியேற்றிவிட்டு அனுசரணைப் பணியை வகிப்பதற்கு ஜப்பானுக்கு பாரிய தேவையுள்ளது. நோர்வேயை வெளியேற்றிவிட்டு, ஜப்பானை நியமித்தால், ஜப்பானுக்கு ஆதரவைத் தெரிவிப்பதைத் தவிர அமெரிக்கா உட்பட்ட மேற்கத்தைய ஐரோப்பாவுக்கு, வேறு எதனையும் செய்ய முடியாது. ஏனெனில் ஜப்பானும் அமெரிக்காவும் மற்றும் மேற்கத்தைய ஐரோப்பாவும் நல்ல நண்பர்கள். ஜப்பான் அனுசரணையாளராக வருவதை இந்தியா விரும்பாமலிருக்கலாம். அவ்வாறெனில், இந்தியாவை அனுசரணைப் பணிக்கு வேறு நாடுகள் முன்மொழிந்தால், அமெரிக்கா உட்பட மேற்கத்தைய ஐரோப்பிய நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும்.


இல்லையெனில் இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாடொன்று தலையிட வேண்டியதில்லை. இலங்கையே இந்தப் பிரச்சினையை தீர்க்குமாறு அமெரிக்கா உட்பட மேற்கத்தைய ஐரோப்பிய நாடுகள்



இந்தியாவிடம் கூற முடியும்.

அடுத்தது நோர்வேயை இந்தப் பிரச்சினையில் தலையிடுமாறு கூறுங்களென இலங்கைக்கு எவரும் அழுத்தம் கொடுக்கவில்லை. நோர்வே தலையிட வேண்டுமென இலங்கை தனியாக எடுத்த தீர்மானம், அதனைத் தீர்மானித்தது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா . அவர் அந்தத் தீர்மானத்தை எடுத்து நோர்வேக்கு அழைப்பு விடுத்த காலத்தில் - ஜே.வி.பி அவருடைய அரசாங்கத்துடன் தகுதிகாண் ஒப்பந்தத்தை எழுதிக் கொண்டு, அவரது அரசாங்கத்தில் பங்காளியாக இருந்தது.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை சார்பாக ஜே.வி.பியின் தலைவர்களில் ஒருவரான நந்தன குணதிலகவிடம் நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்து கேட்டபோது - அது தமக்குப் பிரச்சினை இல்லையென்று



கூறினார். இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் நோர்வே தலையிடக் கூடாதென ஜே.வி.பி செய்த ஒப்பந்தத்தில் சேர்த்திருந்தால் நோர்வே இலங்கையில் பாடம் படித்திருக்காது.

முன்னாள் ஜனாதிபதி - ஜே.வி.பியுடன் கூட்டரசாங்கத்தால் நோர்வே அனுசரணைப் பணியை வகிக்க வேண்டுமென எடுத்த தீர்மானம்,தற்போதைய ஜனாதிபதிக்கு ஜே.வி.பியுடன் பங்குடைய அரசாங்கத்தில் அதனை மாற்றிக் கொள்ள இயலாமல் இருக்க முடியாது. இவ்வாறு பார்க்கும் போது நோர் வேயை அனுப்ப முடியாது என கூறுவதற்கும் எந்தவித காரணமும் இல்லை. இருக்கு மென்றால் அது ஒரு காரணத்தால் மட்டுமே.

ஜே.வி.பியின் துப்பாக்கி காரணமாக இந்தியாவை வெளியேற்ற பிரேமதாஸ செய்த பிழையை, ஜே.வி.பி கூறுவதற்காக நோர்வேயை வெளியேற்றுவதற்கு மகிந்த விரும்பாததுதான் காரணம். ஜே.வி.பி முழங்கினாலும், பெய்தாலும் நோர்வேயை வெளியேற்றுவதென்பது பொய்.

# உளவுத்துறையின் இரகசிய அறிக்கை தயாரிக்கப்பட்ட தகவல் வெளியானது



சென்னை—

கருத்துக்கணிப்பு விவகாரத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதியின் கோபத்துக்கு ஆளாகியுள்ளது தமிழக பொலிஸின் உளவுத்துறை. அ.தி.மு.க கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு நன்றாக உள்ளது என உளவுத்துறையினர் தயாரித்த கருத்துக்கணிப்பின் ரகசிய அறிக்கையே இதற்கு காரணம். சர்ச்சைக்குரிய இந்த அறிக்கை எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

கூட்டணி பலம், தேர்தல் வாக்குறுதி, மக்கள் செல்வாக்கு, அரசுமீதான ஆதரவு அல்லது எதிர்ப்பு அலை உள்ளிட்ட சில காரணங்களே தேர்தலில் அரசியல் கட்சிகளின் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் என்றிருந்த நிலைமாறி, உளவுத்துறையின் கருத்துக்கணிப்பும், ரகசிய நடவடிக்கைகளும்கூட தேர்தல் முடிவை திசைதிருப்பும் என்ற எண்ணம் மக்களிடையே விதைக்கப்பட்டுள்ளது.

கருணாநிதியின் கோபத்துக்கு ஆளாகியுள்ள உளவுத்துறையின் கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்ட விதம் வருமாறு:-

சட்டசபை தொகுதிவாரியாக நகர், புறநகர் பகுதிகளில் தனித்தனியே பிரிக்கப்பட்டன. படித்தவர், கல்வியறிவு பெறாதோர், விவசாயிகள், தொழிலாளர்கள், சிறுபான்மையினர், அரசஊழியர்கள், இளைஞர்கள், பெண்கள் என சகல தரப்பினருடனும் உள்ளடங்கிய ஆயிரம் பேரை மாதிரி கணிப்புக்கு உட்படுத்தியது உளவுத்துறை.

கருத்துக்கணிப்பின் போது முறையான படிவங்கள் ஏதும் மக்களுக்கு வழங்கப்படவில்லை. மாறாக, நீங்கள் யாருக்கு வாக்குப் போடுவீர்கள், என்ன காரணத்துக்காக அந்தக்கட்சிக்கு வாக்குப்போடப்போகிறீர்கள், அரசுமீது அதிருப்தியாக இருக்கிறீர்களா? என கேள்வி கேட்டு பதில் பெற்றனர்.

அ.தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.க இணைந்ததுபற்றி என்ன கருதுகிறீர்கள். விஜயகாந்துக்கு ஆதரவு அளிப்பீர்களா? என்ற கேள்விகளும் கேட்கப்பட்டன.

ஆயிரம் பேரிடம் சேகரிக்கப்பட்ட கருத்து கட்சி வாரியாக சதவீத அடிப்படையில் பிரிக்கப்பட்டது.

அ.தி.மு.கவுக்கு ஆதரவு அலை உள்ளதா, எதிர்ப்புஅலை உள்ளதா, தமிழக அரசின் கடந்தகால நடவடிக்கைபற்றி அரசு ஊழியர்கள் என்ன கருதுகின்றனர், விவசாயிகள் என்ன கூறுகின்றனர் எனப்பல கோணங்களிலும் கூடுதல் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த அறிக்கையை கோடிட்டே தி.மு.க தலைவர் கருணாநிதியும் பகிரங்க மாக குற்றம் சாட்டினார்.

உளவுத்துறையின் கருத்துக்கணிப்பு எந்த அளவுக்கு நம்பகத்தன்மை வாய்ந்தது என்பதும் கருணாநிதிக்கு நன்கு தெரியும். எனினும், இந்தக் கருத்துக்கணிப்பை சில பத்திரிகைகள் மூலம் வெளியிட முயற்சி நடப்பதாக கிடைத்த தகவலை தொடர்ந்தே அவரது கோபம் உளவுத்துறை மீது பாய்ந்ததாக கூறுகின்றனர் விபரமறிந்த அதிகாரிகள்.

அதேவேளை, தி.மு.க, பா.ம.க. சலசலப்புக்கு அஞ்சாத நரிகள் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

வன்னியர் சங்க 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா மாநாட்டில் கலந்துகொண்ட கருணாநிதி கூறியதாவது -

நாம் ஒருவருக்கு மொய் எழுதினால் அவர்கள் மீண்டும் நமக்கு மொய் எழுதுவார்கள். அதுதான் தமிழர் பண்பாடு.

இந்த மாநாட்டில் மத்திய அமைச்சர் அன்புமணி பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். 1997 ஆம் ஆண்டுக்கு முன்பு ஒரு விழாவுக்கு என்னை அழைத்து டொக்டர் ராமதாஸ் மஞ்சள் ஆடை அணிவித்ததாகக் கூறினார்.

அந்த மஞ்சள் ஆடையை இப்பொழுதும் அணிந்து வருகிறேன். நான் மஞ்சள் ஆடை அணிவது பற்றி பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. கருணாநிதி பகுத்தறிவுவாதி - மஞ்சள் ஆடை அணியலாமா என்று கேட்கிறார்கள். இதற்கு நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

நாட்டை ஆள்வது எனக்குப் புதிதல்ல. 4 முறை நாட்டை ஆண்டிருக்கிறேன். 5 ஆவது முறையாக நாட்டை ஆள வந்தால்தான் இப்பொழுது உள்ள துன்பங்கள் துயரங்கள் துடைக்கப்படும் என்று கூறினார்கள்.

எங்கள் கூட்டணிக் கட்சி தலைவர்களை இவ்வாறு கூறுகிறார்கள் என்றால் அ.தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டுகால அவல நிலையில் இருந்து மீள வேண்டும் என்பதால் தான்.

பதவி வைத்து மக்களுக்காக பணியாற்ற வேண்டும் என்பதுதான். பதவிக்கு வந்தால் அடக்கத்துடன் நடப்போம்.

1987 ஆம் ஆண்டு டொக்டர் ராமதாஸ் சமூக நீதிக்காகப் போராடினார். இதனால் இந்தப் போராட்டத்தின்போது 25 க்கு மேற்பட்டவர்கள் துப்பாகி சூட்டுக்குப் பலியாகியுள்ளனர்.

இவ்வாறு கருணாநிதி பேசினார்.

# சிறுபான்மை மக்களின் வாக்குகள் அ.தி.மு.க கூட்டணிக்கே கிடைக்கும்

## திருமாவளவன் தெரிவிப்பு



சென்னை —

சிறுபான்மையினரின் வாக்குகள் அ.தி.மு.க கூட்டணிக்குத் தான் கிடைக்குமெனத் தேசிய லீக் தலைவர்களும், திருமாவளவனும் தெரிவித்தனர்.

அ.தி.மு.க கூட்டணியில் இடம் பெற்றுள்ள விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர் திருமாவளவன் ஏற்கனவே அந்தக் கூட்டணியில் உள்ள ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப்பேசினார்.

நேற்று முன்தினம் மற்றொரு கூட்டணிக்கட்சியான இந்திய தேசிய லீக் கட்சி அலுவலகத்துக்கு திருமாவளவன் சென்றார். அங்கு அவரை தேசிய லீக் கட்சியின் மாநிலத் தலைவர் எம்.பஷீர் அகமட், பொதுச்செயலாளர் தி.மு.அப்துல் காதர், துணைத் தலைவர் ஏ.எம். அப்துல்காதர், நிர்வாகிகள் நிஜாமுதீன், கமுதி பஷீர் ஆகியோர் வரவேற்றனர். அப்போது திருமாவளவன் நிருபர்களிடம் கூறியதாவது -

குடும்ப அரசியலா? மக்கள் அரசியலா? என்பது தான் இப்போது மக்கள் முன் உள்ளது. யார் முதலமைச்சர் என்பதில் தி.மு.க கூட்டணியில் உள்ள தலைவர்களே குழம்பியுள்ளனர். ஆனால், அ.தி.மு.க கூட்டணியில் ஜெயலலிதாதான் மீண்டும் முதலமைச்சர் என்று வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது.

அ.தி.மு.கவில் குடும்ப அரசியல் இல்லை. தி.மு.கவில் அப்படிப்பட்ட அரசியலையே முன்னிலைப்படுத்துவதால் மக்கள் அவர்களை தூக்கியெறிவார்கள்.

முஸ்லிம்கள் இட ஒதுக்கீடு கேட்டு வருகிறார்கள். முதலமைச்சர் ஜெயலலிதா பிற்பட்டோர் நலக்குழுவில் முஸ்லிம்கள் பயன் பெறும் வகையில் விரிவுபடுத்த ஆய்வு நடத்தும்படி தெரிவித்தார். இதிலிருந்து முஸ்லிம் சமுதாயத்திடம் அவர் நல்ல அனுசரணை கொண்டிருக்கிறார் என்பது தெரிகிறது. இதனால் சிறுபான்மையினரின் ஆதரவு அ.தி.மு.க கூட்டணிக்குத் தான் என்பதில் சந்தேகமில்லை எனத்தெரிவித்தார்.



# வாக்களித்த மை காய்வதற்கு முன்னர் அடுத்த கூட்டணிக்கு மாறும் ராமதாஸ்

## நடிகர் செந்தில் கிண்டல்

வேதாரணியம்—

ராமதாஸ் வாக்களிக்கும் போது வைக்கும் மை காயமுன்னர், அடுத்த கூட்டணிக்கு மாறிவிடுவார் என்று அ.தி.மு.க பொதுக்கூட்டத்தில் நடிகர் செந்தில் பேசினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசியதாவது -

கடந்த 5 ஆண்டுகளில் தமிழக முதல்வர் பல சாதனைகள் செய்துள்ளார். ஆனால், கருணாநிதி ஆட்சியில் சோதனைகள் தான் அதிகம். இப்போது அவர் ஜெயலலிதாவிடம் மோதுவதை தவிர்த்து என்னிடம் மோதுகிறார். என்னை கிறுக்கன் என்கிறார். கிறுக்கன் என்பது தமிழ் அகராதியில் பற்று எனப்பொருள். அவர் கூற்றுப்படி எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, அ.தி.மு.கவினர் மீதும், மக்கள் மீதும் எனக்கு பற்று அதிகம். ஆனால், கருணாநிதிக்கோ ராஜாத்தி, தயாளு, ஸ்டாலின், அழகிரி, கனிமொழி ஆகியோர் மீதும், பினாமியாக உள்ள கூஜா மந்திரிகள் மீதும் தான் பற்று அதிகம். ஆனால், அவர் என்னை கிறுக்கன் என்று கூறுகிறார்.

வீரத்தைப்பற்றிப் பேசும் கருணாநிதிக்கு ஒற்றைக்கு ஒற்றை போதுவது தான் வீரம். ஆனால், அவர் அம்மாவை எதிர்க்க கூட்டத்தை சேர்த்து வருகிறார். வீரம், மானம், தியாகம் பற்றிப்பேச கருணாநிதிக்கு எந்த அருகதையும் இல்லை. சேலத்தில் ராமதாஸ் நிருபர்களிடம் கூறுகையில் 134 தொகுதிகளில் தி.மு.க வெற்றி பெறும் என்றார்.

ஆனால், தற்போது நண்பர் திருமாவளவன், வைகோ ஆகியோர் அ.தி.மு.கவில் இணைந்ததால் 134 தொகுதிகளிலும் அ.தி.மு.க வெற்றி பெறும். ராமதாஸ் வாக்களிக்கும் போது வைக்கும் மை காயும் முன் அடுத்த கூட்டணிக்கு மாறிவிடுவார் என்று தெரிவித்தார்.

# நல்ல பையன் என்ற பெயர்வாங்கவா ஜெயலலிதாவிடம் சென்றார் வைகோ?

## காங்கிரஸ் பொதுச்செயலாளர் கேள்வி

விருதுநகர்—

ஜெயலலிதாவிடம் கெட்டபிள்ளை என்று வாங்கிய பெயரை அவரிடமே நல்லபையன் என்ற நற்சான்று வாங்கவா வைகோ அவரிடம் சென்றார் என்று அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் சாந்தாராம் நாயக் விருதுநகர் பொதுக்கூட்டத்தில் கேள்வி எழுப்பினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சி பல நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து சிறப்பான ஆட்சி செய்துகொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது எதற்காக வைகோ, ஜெயலலிதாவிடம் செல்லவேண்டும். வைகோவை பல மாதங்கள் சிறையில் அடைக்க காரணம் என்ன? அப்படி சிறையில் அடைத்த ஜெயலலிதாவிடம் இப்போது அவர் செல்லக் காரணம் என்ன?

ஜெயலலிதாவிடம் கெட்டபிள்ளை என்று வாங்கிய பெயரை அவரிடமே நல்லபையன் என்ற நற்சான்று பெற சென்றிருப்பாரோ என்று நான் நினைக்கிறேன். அவர் சென்றால் அவருடைய ஆதரவாளர்கள் சென்று விடுவார்களா? அவர்கள் நம்முடன் தான் இருக்கிறார்கள். சுனாமி, வெள்ள நிவாரணத்துக்காக மத்திய அரசிடம் இருந்து பெற்ற பல கோடி நிதி உதவியை தேர்தல் செலவுக்காக இப்போது பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். பள்ளி மாணவர்களுக்கு பல உதவிகளைச் செய்வதாகக் கூறி பல கோடி ஊழல் செய்துள்ளார் ஜெயலலிதா.

உலகிலேயே அதிக வழக்குகளைச் சந்திக்கும் முதல்வர் யார் என்றால் அவர் ஜெயலலிதாதான். அவர் மீது 43 வழக்குகள் உள்ளன. அவருக்கு 13 ஆண்டுகள் கண்டிப்பாக சிறைத்தண்டனை கிடைப்பது உறுதி என அவர் மேலும் தெரிவித்தார்.

# தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு ம.தி.மு.க அல்வா கொடுத்துள்ளது!

## நாஞ்சில் சம்பத் தெரிவிப்பு



கன்னியாகுமாரி—

கடந்த 50 ஆண்டுகளாக எல்லோருக்கும் அல்வா கொடுத்த கருணாநிதிக்கு தற்போது தாங்கள் அல்வா கொடுத்துள்ளதாக ம.தி.மு.கவின் கொள்கை பரப்புச்செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

1972ல் மு.க.முத்துவுக்காக எம்.ஜி.ஆர் வெளியேற்றப்பட்டார். 1993 ல் ஸ்டாலினுக்காக வைகோ வெளியேற்றப்பட்டார். இரண்டு வெளியேற்றத்துக்கும் ஒரே நோக்கம் தான் காரணம். தமிழகத்தில் சிலருக்கு எங்கள் கூட்டணி விசித்திரக் கூட்டணியாக இருக்கலாம்.

கடலில் எத்தனை புயல் வந்தது என்பது முக்கியமில்லை. கரை சேர்ந்ததா என்பது தான் முக்கியம். நாங்கள் இப்போது அ.தி.மு.க என்ற ஓடத்தில் கரையேறிக்கொண்டு இருக்கிறோம். வைகோ உல்லாசபுரிக்கு சென்றுவிட்டதாக கருணாநிதி கவிதை எழுதுகிறார். இந்த வயதில் உல்லாசபுரி பற்றிப் பேசலாமா? ஏன் இந்த வக்கிர புத்தி?

ம.தி.மு.க எப்போதும் தி.மு.க கூட்டணிக்குப் போனதில்லை. மாறாக, 1998 முதல் நாங்கள் இருந்த பா.ஜ. கூட்டணியில் தி.மு.க தான் வந்தது. அன்று மானம், சூடு, சொரணை இருந்திருந்தால் வைகோ இருக்கும் கூட்டணிக்கு வரமாட்டேன் என்று கூறியிருக்கவேண்டும். வைகோ சிறையில் இருந்த போது கருணாநிதி பார்க்க வந்தது உண்மை. விவாகரத்து ஆன பின்னர் எதற்கு சிறைக்கு வரவேண்டும்? நீங்கள் வந்த நோக்கமே வேறு. 38 நாட்கள் பாளையங்கோட்டை சிறையில் இருந்த கருணாநிதி - பாம்புகள், பல்லிகள் நடுவில் என்று கதைவிட்டார். பாம்பு இருக்கும் இடத்தில் பல்லி வராது. பல்லி இருக்கும் இடத்தில் பாம்பு வராது. ஆனால், பாம்பு, பல்லி என்று மக்களை ஏமாற்றப்பார்க்கிறீர்கள்.

19 மாதங்கள் சிறையிலிருந்த வைகோ புகழ் பெருகிவிடக்கூடாது. நாடாளுமன்றத் தேர்தலில் பிரசாரம் செய்ய ஆள் வேண்டும் என்பதற்காகத்தான் காத்திருந்தீர்கள். இதையெல்லாம் பேசினால் பிடிக்காது. 1998, 99 தேர்தல்களில் ம.தி.மு.கவுக்கு ஐந்து தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால், 19 மாதம் சிறையிலிருந்துவிட்டு வந்த பிறகு 4 தொகுதியாக குறைத்தீர்கள்.

இந்த நேரத்தில் தான் ஒரு பத்திரிகையில் ம.தி.மு.கவுக்கு அ.தி. மு.க கூட்டணியில் 40 தொகுதிகளும், 20 கோடி ரூபாவும் வழங்கப்படும் என்று செய்தி வெளியானது.

இதைப்பார்த்த ம.தி.மு.க தொண்டர்களும் அன்றே தயாராகிவிட்டனர். தியாகம் செய்கிறார்களாம். தேர்தலுக்குப் பின்னர் தெரியும். அவர்கள் எல்லாத் தொகுதிகளையும் தியாகம் செய்துவிட்டார்கள் என்று.

இந்த முறையும் வைகோ கோபத்தில் தனித்துப் போட்டியிடுவார் என்று கணக்குப்போட்டனர். நாங்கள் ஒன்றும் இளித்தவாயர்கள் அல்ல. ஆனால், வைகோ போயஸ் தோட்டத்தில் ஒரு கொக்கியைப் போட்டு வைத்துவிட்டுத் தான் தி.மு.க கூட்டணியில் பேசினார்.

50 ஆண்டு காலம் கருணாநிதி எல்லோருக்கும் அல்வா கொடுத்து வந்தார். இந்த முறை நாங்கள் அவருக்கு அல்வா கொடுத்துள்ளோம். கருணாநிதியின் கட்டுப்பாட்டில் அவரது கால்களும் இல்லை. கட்சியும் இல்லை. உங்கள் பிள்ளைகளுக்கு எல்லாம் செட் செய்து கொடுப்பவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுத்துள்ளீர்கள். தி.மு.க வில் தியாகம் செய்த எத்தனை பேருக்கு அமைச்சர் பதவி கொடுத்துள்ளீர்கள். உங்களுடன் தாலி அறுத்தபோதும், அ.தி.மு.கவுடன் கூட்டணி ஏற்பட்டது காதலித்த பெண்ணை கரம்பிடித்த மகிழ்ச்சியைத் தருகிறது. இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்திக்காமல் தவிர்த்தது ஜெயலலிதாவின் சிறந்த ராஜதந்திரம் எனவும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அவசரகாலச் சட்டம் ஒரு மாதம் நீடிப்பு!

கொழும்பு
அவசரகாலச் சட்டம் நாடாளுமன்றில் வாக்கெடுப்பு எதுவுமின்றி மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை - பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதன்பின்னர் அவசரகாலச்சட்டம் வாக்கெடுப்பு இல்லாமல் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது. நேற்றைய நாடாளுமன்றக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொல்லவில்லை.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை முன்வைத்து உரைநிகழ்த்திய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க -


உள்ளூராட்சித்தேர்தலை சுதந்திரமானதும், அமைதியானதுமாக நடத்துவதற்கு அனைத்துப்பிரிவுகளுக்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். ஜெனிவாப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் படுகொலைச்சம்பவங்கள் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளன.

விடுதலைப்புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது காணப்பட்ட இணக்கப்பாட்டின் பின்னர் படுகொலைச்சம்பவங்கள் குறைந்துள்ள போதும் - கடந்த காலங்களில் 10 கொலைச்சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

9 கொலை முயற்சிகளும் நடைபெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டத்தையும், அமைதியையும் அரசாங்க உடமைகளையும் பாதுகாப்பதற்கு அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# கொள்ளையர்களின் சூட்டில் வவுனியாவில் மூவர் படுகாயம்!





வவுனியா
வவுனியாவில் இரண்டு வீடுகளுக்குள் புகுந்த கொள்ளையர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வவுனியா - பண்டாரிக்குளத்தில் நேற்று காலை 6.20 மணிளயவில் வீடு ஒன்றினுள் தலைக்கவசம் அணிந்த கொள்ளையர்கள் உட்புகுந்தனர். வீட்டில் இருந்த பெண் இவர்களை கண்டதும் உள்ளே ஓடிச்சென்று மறைந்தார்.

எனினும் அந்தச் சமயம் கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தை கேட்டு பிரஸ்தாப பெண்ணின் வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டிலிருந்தோர் எட்டிப்பார்த்தபோது அவர்களை நோக்கி கொள்ளையர்கள் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் பண்டாரிக்குளத்தைச் சேர்ந்த முத்தையா கணேஸ்வரன் (வயது 33), பரமநாதன் ஜேசுதாஸ் (வயது 31) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை மேற்படி சம்பவம் இடம்பெற்று சிறிது நேர இடைவெளியில் உக்கிளாங்குளப்பகுதியில் கொள்ளையர்கள் வீடு ஒன்றினுள் புகுந்து நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தப்பு சுபாஸ் (வயது 12) என்ற சிறுவனே படுகாயமடைந்தான். அத்துடன், இந்த வீட்டினுள் புகுந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் என்பவற்றை கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றனர்.

சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் மேற்படி சம்பவங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இரண்டு சம்பவங்கள் தொடர்பாகவும் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (03)

# தேர்தல் நடைபெறும் பாடசாலைகள் ஒரு வாரகாலத்துக்கு விடுமுறை

கொழும்பு
எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத்தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களாக செயற்படும் பாடசாலைகள் அனைத்துக்கும் 28 திகதி முதல் ஒருவாரம் விடுமுறை அறிவிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தப் பாடசாலைகள் தேர்தலின் பின்னர் ஏப்ரல் 3 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வாக்குகள் எண்ணுவதற்கு பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் விடுமுறை விடப்படும். அத்துடன் வாக்களிப்பு தினத்தன்று பயன்படுத்துவதற்கு போதியளவு தளபாடங்களை வழங்கவேண்டும் என அந்தப்பாடசாலை அதிபர்களுக்கும், அறிவுறுத்தும்படி மாகாணக்கல்விப் பணிப்பாளர்களுக்கு கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஊடகவள பயிற்சி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளப் பயிற்சி நிலைய முழுநேர ஊடகவியல் டிப்ளோமாப் பயிற்சி நெறி ஆரம்ப வைபவம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். ஜும்மா பள்ளிவாசல் தெருவில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் முதன்மைவிருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

# பாகிஸ்தான் போர்க்கப்பல் நாளை கொழும்பு வருகை!

கொழும்பு
பாகிஸ்தான் கடற்படையின் பி.என். எஸ் சாஜகான் என்ற கப்பல் மூன்று நாள் நல்லெண்ண விஜயமாக நாளை கொழும்புத் துறைமுகத்துக்கு வரவுள்ளது.

இரு நாட்டு கடற்படை உறவை வலுப்படுத்தும் விதமாக பாகிஸ்தானிய கடற்படைக் கப்பல் இலங்கைக்கு பயணத்தை மேற்கொண்டுள்ளதாக பாகிஸ்தானிய தூதரகம் நேற்று செவ்வாய்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது பாகிஸ்தானிய கப்பலின் கட்டளைத்தளபதி இலங்கையின் மூத்த கடற்படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இருநாட்டு கடற்படையினரும் கூட்டுப்பயிற்சி நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளனர். மேலும் இருநாட்டு கடற்படையினரது உறவை வலுப்படுத்தும் விதமாக சமூக செயற்பாடுகளிலும் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன் பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசு நாளாக பிரகடனப்படுத்தப்பட்ட நாளான மார்ச் 23 ஆம் திகதி சுதந்திரதின விழாவை கப்பல் தளத்தில் நடத்தவும் பாகிஸ்தானிய தூதரகம் திட்டமிட்டுள்ளது.

இதன் பின்னர் பாகிஸ்தானிய கடற்படைக் கப்பல் பாகிஸ்தானுக்கு புறப்படும் என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

# பொற்பதி வீதியில்...

அரசியல் போராளிகள் யாழ்ப்பாணத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை இடைநிறுத்திவிட்டு வன்னிப்பகுதிக்குச் சென்றனர்.

ஜெனிவா பேச்சுவார்த்தையின் பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் 35 பேர் கொண்ட குழு ஒன்று யாழ்ப்பாணத்தில் தமது செயற்பாடுகள்ளை மேற்கொள்ள வருவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து- கொக்குவில் - பொற்பதி வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தை சூழவுள்ள பகுதிகளில் அதிகளவு படையினர் குவிக்கப்பட்டு போக்குவரத்து செய்தவர்களை தீவிர பரிசோதனைக் குட்படுத்தப்பட்டதாகவும், அந்தப்பகுதி மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, அரசியல்துறை அலுவலகத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்ட பல்கலை, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களை மிரட்டி கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இந்தக் கொலை அச்சுறுத்தல் தொடர்பாக சம்பவ இடத்துக்கு வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் மாணவர்கள் முறையிட்டனர். அதேவேளை, சம்பவ இடத்துக்குச்சென்ற நாடாளுமன்ற உறுப்பினருக்கும் படையினரால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அத்துடன, கொலை அச்சுறுத்தலை விடுத்த படையினர் துப்புரவு பணியில் ஈடுபட்டவர்களின் விபரங்களை வழங்குமாறு மக்களை அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, நேற்று திருநெல்வேலி- பரமேஸ்வராச் சந்தி, கொக்குவில் பொறபதி வீதி போன்ற பகுதிகளில் படையினர் அதிகளவில் குவிக்கப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# கிழக்கில் ஜிகாத் குழு...

டமும் விசாரணை மேற்கொண்ட போது பலதகவல்களை வெளியிட்டனர்.

இதன் காரணமாக இன்று ஊடகவியலாளர் மாநாடு நடத்தப்பட்டு விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்ததால் தற்போது தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ நீதிமன்றம் ஊடாக வழமையான நடைமுறையின்படி இவர்கள் விடுவிக்கப்படுவர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஊடகவியலாளர்களிடம் முஸ்லிம் ஊர்காவல் படையினர் கூறுகையில் -

வாழைச்சேனை, தோப்பூர் பொலிஸ் நிலையங்களில் நாங்கள் கடமையாற்றி வந்தோம். கடந்த 14 ஆம் திகதி மட்டக்களப்பு செல்வதற்காக மது அருந்திய நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தோம்.

எம்மிடம் அனுமதிப்பத்திரம் இல்லாததால் மகிந்தபுர இராணுவ முகாமின் பின்பகுதியில் உள்ள பாதையினூடாக ஈச்சிலம்பற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கிச் சென்றபோது போராளிகள் எம்மைக் கைது செய்தனர் எனத் தெரிவித்த அவர்கள்-

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு -

கேள்வி:- நீங்கள் முஸ்லிம் ஊர் காவல்படை என்பதால் உங்களுக்கும் ஜிகாத் போன்ற அமைப்புகளுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

பதில்:- மூதூர், தோப்பூர் பகுதிகளில் ஜிகாத் அமைப்பு செயற்பட்டு வருகின்றது. அதனுடைய அமைப்பாளர்களாக மூதூர் பகுதிக்கு நசார், குத்துஸ், வல்லி, முபாரிங், தொபிக், கந்தப்பொடிராசிக், நண்டு, வண்டிக் குட்டான் ஆகியோரும் தோப்பூர் பகுதியில் காஜாமுகைதீன், உபைபுல்லா, நிசாம்தீன், சலீம், சரும் ஆகியோரும் செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால், அவர்களுக்கும் எமக்கும் தொடர்பில்லை. அவர்கள் இராணுவ அதிகாரிகளுடனேயே தொடர்புகளை வைத்துள்ளனர்.

கேள்வி: வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமை செய்வதால் கருணா சம்பந்தப்பட்ட குழுக்களுடன் ஏதாவது தொடர்புண்டா?

பதில்:- தீவுச்சேனைக்கு எனது உறவினர் வீட்டுக்குச் சென்றபோது கருணா குழுவின் முகாம் இருப்பதை அறிந்துகொண்டேன். இராணுவ முகாமுக்கு அருகிலேயே அந்த முகாம் உள்ளது.

அவர்கள் படை அதிகாரிகளுடனேயே தொடர்புகளை வைத்துள்ளனர். ஈ.பி.டி.பி முகாமில் தான் அவர்களுடன் இராணுவப் புலனாய்வாளர்கள் தொடர்புகளை வைத்துள்ளனர் என்று தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் இன்று தமிழீழ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# அனுசரணைப்...

இருந்து நோர்வே வெளியேற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் இலங்கைக்கான நோர்வே தூதுவராலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (01)

# நோர்வேயை...

ஹான்ஸ் பிரஸ்கர், நோர்வே அபிவிருத்தி அமைச்சரும், சமாதான சிறப்புத் தூதுவருமான எரிக்சொல்ஹெய்ம் ஆகியோருக்கெதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

# குடும்பஸ்தர்...

சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவரின் சடலத்தை பொலிஸார் ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

# போராளிகளின்...

இந்தநிலையில், அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட புதிய நிபந்தனைகளால் அரசியல்துறைப் போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசியல் பணிக்காகச் செல்லும் போராளிக்ள்- பொது நிகழ்வுகளின்போது தேசியக் கொடி ஏற்றக்கூடாது, மாணவர்களையும், மக்களையும் எழுச்சி நிகழ்வுகளில் கலந்துகொள்ள வைக்கக்கூடாது என்பன போன்ற பல நிபந்தனைகள் காரணமாகவே தமது பயணத்தை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் ெசயற்பாடானாது ஜெனிவாவில் நடைபெற்ற 1ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட தீர்வை அரசு மீறியுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

# புலிகளின் கட்டுப்பாட்டு...

தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் கடற்கரையில் நின்றிருந்த போராளி ஒருவரும் இளைஞர் ஒருவரும் படுகாயமடைந்தனர். குடியிருப்புப் பகுதியில் குண்டுகள் வீழ்ந்து வெடித்தால் பல வீடுகள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதலால் அச்சமடைந்த மக்கள் இடம்பெயர்ந்து ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் தஞ்சமடைந்தாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான மூன்று படகுகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் படகு ஒன்றுக்குமிடையே துப்பாக்கிச் சமர் இடம் பெற்றுள்ளதாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் உறுதி செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்வ்ஸ்டொற்றிய கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தத் துப்பாக்கிச் சமர் ஏற்பட்டதற்கான காரண்ம் இரு தரப்பாலும் ஏற்பட்டிருக்கலாமென்று கூறினார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்ற இடத்துக்கு உடனடியாகச் சென்றதன் காரணமாக பாரிய சமர் ஒன்று இடம்பெறாத வகையில் தடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக எமக்குத் தகவல் கிடைக்கப் பெற்றதும், உடனடியாக விடுதலைப் புலிகளுடனும், கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தலைமையத்துடனும் தொடர்பு கொண்டோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் படி இது ஒப்பந்தமீறல் என்ற பொழுதிலும், எவர் குற்றமிழைத்துள்ளார் என்பது குறித்து எமது விசாரணைகளின் பின்னரே கண்டறிய முடியும்.

எப்படியிருந்தபொழுதிலும் இந்த விடயம் பாரதூரமான நிலையை எட்டாதது நல்லதொரு விடயம்.

துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம் பெற்றிருப்பதற்கு சாட்சியாக கரையோரப் பகுதியில் உள்ள சில வீடுகளில் துப்பாக்கிச் சன்னாங்கள் காணப்பட்டதையும்தமது பிரதிநிதிகள் அவதானித்துள்ளதாகவும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.